
28583



# காவிரி: தமிழகத்தின் உயிரோட்டம்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

98

காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி — யென
மேவிய யாறு பலவோடத்திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

— பாரதியார்

# காவிரி

# தமிழகத்தின் உயிரோட்டம்

பேராசிரியர் குழு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 134

திருவள்ளுவராண்டு 2021 கார்த்திகை—திசம்பர் 1990
நூல் : காவிரி தமிழகத்தின் உயிரோட்டம்
தொகுப்பு : பேராசிரியர் குழு
பதிப்பு. முதற்பதிப்பு 1990
விலை :
அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம்
தஞ்சாவூர்.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | நடந்தாய் வாழி காவேரி! | ix |
| 2 | இலக்கியச் சான்றுகள் | 1 |
| 3 | வரலாறும் கல்வெட்டும் | 17 |
| 4 | காவிரி பற்றிய வருணனை | 25 |
| 5 | இலக்கிய ஆதாரங்கள் | 45 |

## பாராட்டி மகிழ்கின்றேன்!

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோற் பொற் கோட்டு
மேருவலந் திரிதலான்.

பாவிரித்துப் பாவலர் பாடி மகிழ, கா விரித்துக் கால்களாய் நடந்து கழனி விளைத்து நெற்களஞ்சியம் கண்ட காவிரிப் பெண்ணாள், செந்தமிழ் நாட்டாருக்கே சொந்தமெனும் அந்த உரிமையை நிலைநாட்ட,

மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியச் சான்றுகளோடு இன்று வரையுள்ள வரலாற்று, கல்வெட்டுச் சான்றுகளையும் எடுத்துத் தொகுத்து வகுத்து அளித்த தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியப் பெருமக்களைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் — சி. பாலசுப்பிரமணியன்
தஞ்சாவூர். — துணைவேந்தர்.

# நடந்தாய் வாழி காவேரி!

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
    மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
    நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி
    நடந்த வெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோ ல் வளையாமை
    அறிந்தேன் வாழி காவேரி

வான் மதுரை வலம் வந்த பொய்யாக் குலக்கொடி வையை மகளும் தேன் மணக்க வந்தூட்டும் சேரத்துச் செல்வ மகளாம் ஆன் பொருநையும் வான்பொய்ப்பினும் தான் பொய்யாது நலம்பல செய்து வளம்பல விளைக்கும் பொன்னியாம் எங்கள் புகார்ச் சோழவளநாட்டுக் கண்ணவளாம் காவிரியும் பாமணக்கும் பாவலர்களால் நாமணக்கப் பாடப்பட்டிருப்பதை நாம் அறிவோம்; நாடும் அறியும்.

காடுகெடுத்து நாடாக்கிக் கால்வாய் கண்டு நீர்கொண்டு நிலந்திருத்தி நெல்மணியைத்தாம் விளைத்துப் பாராண்ட கரிகாலன் நாடு, காவிரி நாடு: அவன் காவிரி நாடன். காவிரிப் பெண்ணாள் வந்து கவினுற வளமூட்டிய கவின் சோழ நன்னாடு நாம் கண்ட வளநாடு; ஆண்டவர் வளவர்.

எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் எழில்நெறி காட்டும் பதினெண்கீழ்க் கணக்கும் கட்டமுதாம் கம்பன் பாடலும் கவினார் முத்தமிழ் நாட்டும் சிலம்பும் தித்திக்கப் பாட வந்து தேனார் பெருக்கெடுக்க வற்றாத காவிரியாய் வந்த மருமகளை, வலக்கால் எடுத்துவைத்து வருக என அழைத்து வாழ்வு நலங்கண்டதும் கொண்டதும் தொன்மரபின் சோழ வளநாடு; கொண்டவர் பன்னலச் சிறப்பின் பாங்குறு வளவர்; பண்பாடு கொள் தமிழர்.

மலைத்தலைய தலைக்காவிரி, மலைத்தலம் விட்டு அலைக்கரம் விரித்து வயல் வளம் காண நயமுற நடந்து

மேட்டூரிலே மேவி நிலைகண்டு, மெல்லென நடந்து மேற்றிசை ஒதுக்கி, வெள்ளப்பெருக்கேற்கக் கொள்ளிடம் கண்டு கல்லணை மேவிக் காவிரிப் பெருக்காய் வெண்ணாறு கண்டு அதில் வெட்டாற்றுப் பெருக்காய்ப் பன்னலம் பெருகிடப் பக்குவம் ஈந்து, மருக்காடு காட்டும் திருக்காட்டுப் பள்ளியில் குணதிசை பாயும் குடமுருட்டி கண்டு, சிந்து பாடும் ஐந்து ஆறாகத் திருவையாற்றிலே தேங்கு நலங்கொண்டு, வங்கக்கடல் வரை எங்கும் நீர் பரப்பி வேலி ஆயிரம் விளையுள் ஈந்து, ஒரு களிறுபடியும் சீறிடம் எழுகளிறு புரக்கும் நாடென ஆக்கி, சோறு வடித்த கஞ்சி யாறு போலப் பரந்தொழுகும் சோழ வளநாட்டுத் தஞ்சை, திருச்சி மாவட்டங்களும் அவற்றைச் சார்ந்த இடங்களும் நெற்களஞ்சியமென நிலையுறு புகழ்கொளப் பொற்றரு மருமகளாய்ப் புனல் சுரந்துகாட்டும் கற்புடைச் செல்வி காவிரிப் பெண்ணாள்.

கருநாடகத்தில் பிறந்த பெண்ணாள்; கனிதமிழ்நாடு வளர்த்த கண்ணாள். சோழத்து மருமகளாய்த் தொன்மையும் மரபும் கொண்டாள்; பூவிரி மதுமணம் கூட்டும் புனலுறு காவிரி நறுமணப் பெண்ணாள்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ் வழங்கிய நாள்தொட்டு, வைய மீன்ற தொல் மக்களுளத்தினிற் பைய நாவை அசைத்த பழந்தமிழ் காலந் தொட்டு, காலாட மடைதிறந்து சேலாடு வளங்கொழிக்கும் காவிரிப் பெண்ணாள் வாழும் பொன்னி வளநாடு; புதுப்புனல் காவிரி நாடு; நன்செய் வளங்கொழிக்கும் தண்செய் வளநாடு.

பல்லாயிரம் பல்லாயிரம் ஆண்டுகட்டு முன்னரே,
பூவார் சோலை மயிலாடப்
புரிந்து குயில்கள் இசைபாட
காமர் மாலை அருகசைய
நடந்து வந்த காவிரிப் பெண்ணை,

மஞ்சள் குளிப்:பாட்டி, மையிட்டுப் பொட்டுமிட்டுக் கஞ்சமலர்த்தாளிலே கலீரெனச் சிலம்பொலிக்க, நெஞ்சத்திருத்தி நேரிழையாய்த் தானேற்று, மாலை புனைந்து ·மங்கலநாண்

தானணிந்து குடிபுரந்துவக்கும் கொண்ட மருமகளாய்க் கண்டது தமிழகத்துச் சோழவள நாடு.

பெற்று வளர்த்துப் பேணிப் புரந்துவந்து கற்றுக் கொடுத்துக் கற்புநெறி காணென்று சொற்காத்துச் சோர்விலாப் பெண்ணாகச் சோழ வளநாட்டுத் தற்கொண்டான் பேணும் தகைமை உடையாளாகக் கொடுத்து மகிழ்ந்தது கருநாடக நாடு; எடுத்து மகிழ்ந்தது சோழ வளநாடு; இதுவே உண்மை நிலை.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத மலர்ந்த முகத்தோடு சோலைப் பசுங்கிளியாய்ச் சொந்தமென வந்த மருமகள் காவிரி; சோழநாட்டுக்குரியவள்.

பிறந்த இடத்தின் பெரும்புகழ் போற்றி, புகுந்த இடத்தில் பிறர்போற்ற வாழும் பெண்ணை, பெற்றவர் அழைத்துச் சென்று கொட்டிலில் அடைத்துக் கட்டிலில் இருத்தி பெற்றவர்க்கே பெண்ணுரிமை என்று பேசின், ஏசிப் பேசாதா இந்த உலகம்? கொண்டவன் வீட்டில் வாழவிடாத பெற்றோரிடத்துக் குவியாதோ பெரும்பழி?

பாவலரெலாம் கூடி பாமாலை சூட்ட
பூமாலை இட்டு பொற்றாலிதான் கட்டித்
தாமவளைக் கைப்பிடித்தான் தனக்கன்றோ அவள் சொந்தம்.
பெற்றோம் வளர்த்தோம் எனப் பேசுவதில் என்ன பயன்?
அவை வெற்றுரை அன்றோ?

கல்வெட்டில் வெட்டிக் காவிரியாள் எமக்குச் சொந்த மெனப் பல்லேட்டில் தாம்பதித்துப் பதிவுத் திருமணமே கொண்டவற்கன்றோ காவிரியாம் கோலப்பெண் உரியாள்! வாழக் கொடுத்து உவந்த வளர்மாதிருமகளை வாழாவெட்டி யாக்கி வகையாகத் தாளிட்டால் கொண்டவன் பொறுப்பதுண்டோ? இந்தக் குவலயம்தான் ஏற்றிடுமோ? கண்டவர் கண்டபடி ஏசாரோ? இது கருநாடகத்தோர்க் கழகோ?

"பெற்றோம்! வளர்த்தோம்!" எனப் பேசி கருநாடகத்தார், வற்றாத காவிரியை வற்றச் செய்து, வளங்கொண்டு நாட்டின் நலங்கண்ட சோணாட்டை வெற்றிடமாய்ப்

பாலையாய் வீணாக்கிக் காண்பதில் அவர்க்குத்தாம் என்ன மகிழ்ச்சியோ? ஏற்குமா இவ்வுலகம்?

நெற்களமாய் எங்கும் நிறைந்திருந்த சோணாடு வற்கடத்தால் வாழும் வகைகண்டார் அந்நாட்டார்; அவரும் நம் நாட்டார். பாரதத் திருநாட்டார்.

பெற்றவர்கள் நீங்கள்; அந்தப் பெருமை உமக்குண்டு. கற்றவர்கள் நாங்கள்; எங்கள் கருத்திலும் அந்நிலையுண்டு. ஆனால்......கொண்டவர்கள் நாங்களாயிற்றே! தாய்வீடு என்று சொல்லித் தகுதி மறந்து அங்கே இருத்தி வைத்தல் தக்க பண்பாடாமோ? தமிழகத்தின் கேள்வி இது!

எங்கள் மருமகள் காவிரிப் பெண்ணை எங்களிடமே அனுப்பி வையுங்கள்! கொண்டவனோடு வாழவைப்பதே குடிப்பெருமை! பெற்றவர்க்கும் அது பெருமை; மற்றவரும் பாராட்டுவர்.

உரிமையைக் கேட்கிறது தமிழகம்; உரிமையை நிலைநாட்ட உற்றதோர் சான்றுகளாக........ஒன்றா? இரண்டா? ஓராயிரமாகத் தொகுத்து வகுத்துக் காட்டுகிறது தமிழகம்.

கருநாடகத்தார் உள்ளம் கனிய வேண்டுமென விரும்புகிறது தமிழகம்; காலங்காலமாக நாம் ஒருமொழி வைத்து உலகாண்டவர்கள் என்ற உண்மையை நினைவுபடுத்துகிறது தமிழகம்.

வந்த மருமகள் நமக்கே சொந்தமென நிலைநாட்ட, பண்டிருந்து இன்று வரை கொண்டுவந்த சான்றுகளைக் குவித்துத் தொகுத்து எடுத்து தொடுத்து மாலையாக்க வேண்டுமென,

தமிழினக் காவலர், தமிழகக் கல்வியமைச்சர் தமிழ்ப் பல்கலைக் கழக இணைவேந்தர் மாண்புமிகு டாக்டர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களும் புலவரேறு, சங்கத் தமிழ்ச்செல்வர், சங்கநூற் செல்வர், தமிழ்ப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் சி.பாலசுப்பிரமணியனார் அவர்களும் விரும்பினர்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மாண்புமிகு இணைவேந்தர், மாண்புமிகு துணைவேந்தர்- நாடு, இனம், மொழி போற்றும் நற்றமிழ்ச் சான்றோர் இருவர்தம் எழுச்சியும் எண்ணமும் நிறைவுற, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பல்துறைப் பேராசிரியப் பெருமக்கள் தொகுத்தளித்த தொகுப்பே காவிரி தமிழகத்தின் உயிரோட்டம் என்னும் இந்நூல்.

பூவிரித் தோடி வரும் காவிரிப் பெண்ணாள் நமக்கே உரியவள் என நாட்டுதற்கு இவை தக்க சான்றுகள். நமக்கு மட்டும் உண்மை நிலை தெரிந்தால் போதுமா? இந்த உலகத்திற்கும் தெரிய வேண்டுமே!

கல்லணை கட்டிக் கால்வாய் பல வெட்டி காடு கெடுத்துக் கழனி வளங்கண்ட கரிகால் வளவனாக, இன்று காவிரி நீருக்காகப் போராடி வெற்றிவாகை சூடவிருக்கும் தமிழினத் தலைவர், தமிழவேள், முத்தமிழறிஞர், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, இந்த அரிய படைப்பினைப் படைத்து அகமிக மகிழ்கின்றது தமிழ்ப் பல்கலைக்கழகம்.

காவிரிப் பெண்ணே! நின் காற்சிலம்பு ஒலிக்க - கரிகாலன் வளநாட்டுக் கழனியெலாம் மணக்க "வருக! வருக" என வரவேற்கிறது தமிழகம்!

தமிழ்ப் பல்கலைக்கழகம் — புலவர் சி.இளங்கோவன்
திருவள்ளுவராண்டு 2021 — உதவி இயக்குநர் பதிப்புத்துறை

# இலக்கியச் சான்றுகள்

## பெண்ணுக்குப் பெருமை

காவிரிப்பெண்ணின் புகுந்த வீடு தமிழகம். பிறந்த வீட்டிலேயே தேங்கிவிடுதல் எந்தப் பெண்ணுக்கும் பெருமை தராது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பருகும் நீராகவும் உண்ணும் உணவாகவும் வழிபடு தெய்வமாகவும் பண்பாட்டின் சின்னமாகவும் தமிழர்க்குக் காவிரி இருந்து வருகிறது. தமிழக உடம்பின் பல பகுதிகளிலும் சென்று பரவி அதன் உயிர்ப்புக்கு மூலமாகும் உயிரோட்டமாகக் காவிரி விளங்குகிறது. உலகெல்லாம் வானோக்கி வாழ்வது இயல்பெனினும் தமிழகம் காவிரியின் வரவுநோக்கியே வாழ்கிறது. sivaram

எத்தனையோ அரசியல், சமூக மாற்றங்கள் காவிரியை வற்றச் செய்யவில்லை. தமிழகத்தின் தாய் என்றும் செல்வச் செவிலி என்றும் புலவர்களால் போற்றப்பெற்ற காவிரியாற்றின் மீது தமிழர்களுக்கு என்றும் நிலைத்த உரிமை உண்டு.

## ஒருமைப்பாட்டிற்கே ஊறுவிளைவிக்கும்

குடகில் தோன்றி மைசூரில் தவழ்கிறது என்பதாலேயே, தமிழகம் வராமல் அதனை முடக்கி விடுதல் இந்திய ஒருமைப்பாட்டிற்கே ஊறு விளைவிக்கும் செயலாகும். துய்ப்புரிமை என்ற அடிப்படையில் நோக்கினாலும் பல்லாயிரம் ஆண்டுகளாகக் காவிரியின் வற்றாப் பெருவளம் தமிழர்க் குரியதாக இருந்திருக்கிறது. இலக்கியங்கள், கல்வெட்டுகள், இதிகாச புராணங்கள், வரலாற்றுச் செய்திகள் ஆகிய பல்துறை ஆவணங்கள், தமிழர்க்குக் காவிரியின் மீதுள்ள உரிமையைத் தெளிவாகக் காட்டுகின்றன.

## சங்க இலக்கியங்களில்......

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங் களில் காவிரியாற்றால் தமிழகம் பெற்ற நீர்வளமும் நில்வளமும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. "மேற்றிசைக் குடகிலிருந்து

காவிரி தோன்றி எம்முடைய சோணாட்டினை வளம்படுத்துகின்றது'' என்கிறார் ஆலூர் மூலங்கிழார் என்ற புலவர்.

............. குடா அது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை எம்மூர் .........

புறநானூறு 16

இவ்வாறு மலையில் தோன்றும் காவிரியாறு எங்கு சென்று முடிகிறது? காவிரிப்பூம்பட்டினத்தில் அது கடலோடு கலக்கிறது. எவ்வாறு கலக்கிறது?

மாமலை அணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்

பட்டினப்பாலை 95-97

என்று பாடுவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். மலையில் தோன்றிக் கடலில் கலக்கும் காவிரியாறு இடையில் எவ்வாறு செல்கிறது? "காவிரிக் கோடு தோய் மலிர் நிறைக்கழையழி நீத்தம்'' என்று அகநானூறு (341) குறிப்பிடுவது போல ஓடக்கோல் மறையுமளவு பெருவெள்ளமாகச் செல்கிறது. தான் மோதும் இருகரைகளையும் தகர்த்துச் செல்லுகின்ற பேராறாக அது வருணிக்கப்படுகிறது. "வருபுனல் நெரிதரும் இருகரைப் பேரியாறாகக்'' காவிரி உறந்தையில் காட்சியளித்திருக்கிறது.

## வான்பொய்ப்பினும் தான்பொய்யாது

இவ்வண்ணம் தமிழகம் முழுவதும் கடலில் சென்று கலக்கும் வரையில் வற்றாப் பெருவெள்ளமாக ஒரு காலத்தில் காவிரியாறு ஓடிக்கொண்டிருந்தது. கடந்த காலத்தில் எந்த ஆண்டிலும் அது பொய்த்ததில்லை என்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன. "ஞாயிறு நான்கு திசைகளிலும் தோன்றினாலும் வெள்ளி மீன் தெற்கே சென்றாலும் அழகும் குளிர்ச்சியும் கொண்ட காவிரி, பல கால்களாய் ஓடிக் கரும்பை விளைக்குமாறு அமைந்தது.'' எனப் பாடுவர் வெள்ளைக்குடி நாகனார்.

வெள்ளியாகிய விண்மீன் வடதிசை யிலிருந்து தென்திசைக்குச் சென்றாலும் "வானம்பாடிப் பறவை மழை நீரை அருந்தப் பெறாமல் வருந்தும் நிலை தோன்றினாலும் மலைத் தலைய கடற்காவிரி புனலாகப் பொன்னாகக் கொழிக்கச் செய்யும்" என்பர் பட்டினப்பாலை ஆசிரியர். பட்டினப்பாலை என்ற அகநெடும்பாடலும் பொருநராற்றுப்படை என்ற நெடிய ஆற்றுப் படையும் காவிரியின் வளத்தைப் பலவகையிலும் எடுத்துக் காட்டுகின்றன.

"கணைவிசைக் கடுநீர்க் காவிரிப் பேர்யாறு." என்று அகநானூற்றிலும் "செழும்பல இருந்த கொழும்பல் தண்பணைக் காவிரிப் படப்பை" என்று பதிற்றுப்பத்திலும் இதனது இழுத்துச் செல்லும் நீர்ப்பெருக்கமும் இதனால் வளம்பெறும் வயலிடங் களும் கூறப்பெறும்.

## அன்று அவள்; இன்று நாங்கள்!

காவிரியாற்றின் துறைகளுள் ஒன்றாகிய கழாஅர் என்னுமிடத்தில் ஆண்டுதோறும் புதுப்புனல் விழா நிகழும். அப்போது காவிரியில் நீராடிய ஆட்டனத்தி என்ற சேர இளவரசனைக் காவிரி அடித்துச் சென்றது. இதனைக் கண்டு அவன் மனைவியும் கரிகாற் சோழனின் மகளுமான ஆதிமந்தி ஓவெனக் கதறினாள். அன்று அவ்வளவு ஈர்ப்புமிக்க வெள்ளம் காவிரியில் தவழ்ந்தது; அன்று ஆதிமந்தி அழுது அரற்றினாள்; இன்று காவிரியில் நீரில்லா நிலையில் எண்ணற்ற தமிழர் அழுது அரற்றுகின்றனர்.

## காவிரி நாடன்

அன்று சோழப் பேரரசின் பெருவேந்தனாகத் திகழ்ந்த கரிகாலன், கரிசல் வளமிக்க கால்களைத் தோற்றுவிக்கும் காவிரியால் அப்பெயர் பெற்றான்; அஃது உண்டாக்கிய பெருவளத்தால் திருமாவளவன் எனப்பட்டான். மாவளத்தான் என்ற பெயரும் இத்தொடர்பில் தோன்றியதே. இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காவிரியை ஒட்டிப் பெயர்சூடிக் கொள்ளும் மரபைப் பிற மாநிலத்தில் பார்க்க இயலாது. சிலப்பதிகாரக்கால முதல் இன்று வரை தமிழர் பலர்

காவிரி நாடன், பொன்னிவளவன் எனப் பெயர் கொள்ளுதலைத் தமிழகத்திலேயே காணலாம்.

## நடந்தாய் வாழி காவிரி!

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதி காரத்தில் சோழன், காவிரிநாடன் என்று குறிப்பிடப் படுகிறான். சிலப்பதிகாரக் காவிய நாயகன் கோவலனும் அவன் காதலி மாதவியும் யாழிசைத்துக் காவிரியையும் கடலையும் நோக்கிப் பாடும் பாடல்கள் இந்திய இலக்கியத்திலேயே ஒரு சிறப்புடைய பகுதியாகும். அதனில்

> "காவிரிப்பெண்ணே உன்னுடைய சோழ வேந்தன் கங்கைவரை படையெடுத்துச் சென்றாலும் அவனோடு நீ மனப்பிணக்குக்கொள்ளவில்லை. இதுதான் மங்கையர் பெருங்கற்பு.
>
> உழவர்களின் ஆரவாரமும் மதகுகளில் வெள்ளம் மிகுந்து வரும் பேரொலியும் விழாச் சிறக்கும் ஓசைகளும் பெருக நடக்கும் காவிரியே வாழ்க.
>
> வண்டுகள் ஒலிக்க, பூக்களை ஆடையாகப் போர்த்துக் கொண்டு கரிய கயல்மீனாகிய கண்ணால் பார்த்துக் கொண்டே மென்மையாய் நடக்கின்றாய் நீ.
>
> நீ சோழ நாட்டை மகவாய் வளர்க்கும் தாய்; ஊழிக் காலத்திற்கும் நீ வழங்கும் பேருதவியை நிறுத்த மாட்டாய்".

என்ற கருத்துபடச் செய்யுள் அமைவதனைக் காணலாம்.

## காப்பியம் போற்றும் காவிரி!

ஊழிகள் மாறினாலும் காவிரி உதவுதல் மாறாது என்ற நம்பிக்கை அக்காலத்தில் இருந்தது. "சனி என்னும் கோள் தன் நிலையில் மாறினாலும் வெள்ளி தென்திசையிற் சென்றாலும் குடகுமலையில் பெய்யும் மழை அங்குத் தோன்றிய பல்வகைப் பண்டங்களையும் அள்ளிக் கொண்டு வரும் காவிரியின் ஒலி சோழ நாட்டில் கேட்கின்றது." என்பர் இளங்கோவடிகள். இந்தக் காவிரியின் கரையில் ஒரு சிறு தீவென அமைந்துள்ள திருவரங்கத் திருநகரில் அரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கின்றார். "துன்பமான காலங்களிலும் நாட்டைக் காக்கும் காவிரி." என்று

சிலப்பதிகாரமும் 'தடையின்றி வரும் காவிரி' என்று மணி மேகலையும் குறிக்கக் காணலாம்.

## வற்றாத காவிரி

இடைக்காலப் பக்தி இலக்கியங்களிலும் காவிரியின் நீர்வளமும் அதனாற் பெறும் நிலவளமும் மிகுதியாகக் கூறப்படுகின்றன. தமிழின் இருபது நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் காவிரியைப் போலத் தொடர்ச்சியாக எந்த ஆறும் பேசப்பட்டதில்லை. வையை என்னும் பொய்யாக் குலக்கொடி வளம் சுருங்கிய காலத்திலும் பாலாறு ஊற்றுப் பெருக்காலேயே உலகூட்டும் என மாறிய காலத்திலும் காவிரி வற்றியதில்லை.

## நாயன்மார் பாடிய காவிரி

சைவ நாயன்மார்களில் ஒருவராகிய திருஞானசம்பந்தர் திருவையாறு, வடகரை, குரங்காடுதுறை, சீர்காழி, சக்கரப்பள்ளி, துருத்தி, கண்டியூர், திருநல்லூர், திருநாகேச்சுரம், திருநெய்த் தானம், திருப்பாண்டிக்கொடுமுடி, திருப்புள்ளமங்கை, திருமயிலாடுதுறை, திருமாந்துறை, திருவலஞ்சுழி, திருக்குடந்தை ஆகிய தலங்களைக் குறித்த தம் தேவாரப் பாடல்களில் காவிரியின் வளத்தைச் சிறப்பிக்கின்றார்.

பூவிரி கதுப்பின் மடமங்கையர்
அகந்தொறும் நடந்து பலிதேர்
பாவிரி இசைக்குரிய பாடல் பயிலும்
பரமர் பழமை யெனலாம்
காவிரி நுரைத்து இருகரைக்கும்
மணி சிந்த வரி வண்டு கவர
மாவிரி மதுக்கிழிய மந்தி குதி
கொள்ளும் மயிலாடுதுறையே.

வரைவந்த சந்தொடு அகிலுந்தி வந்து
மிளிர்கின்ற பொன்னி வடபால்
திரை வந்து வந்து செறிதேறலாடு
திருமுல்லை வாயிலிதுவே.

இப்பாடல்கள் முறையே மயிலாடுதுறை, திருமுல்லைவாயில் ஆகிய கடைமடைப் பகுதியில் அமைந்த தலங்களுக்குரியன. காவிரியின் நீர்ப்பெருக்கு அதன் கடைமடை வரை பயன்பட்ட வரலாற்றை இவ்விலக்கியப் பகுதிகள் காட்டுகின்றன.

## கங்கையிற் புனிதமாய காவிரி

"கிளர் புனற் காவிரி வட்ட வாசிகை கொண்டடி தொழுதேத்து பாண்டிக் கொடு முடி", "கல்லை உந்தி வளம் பொழிந்திழி காவிரி" என்று சுந்தரமூர்த்தி நாயனார் காவிரியின் நீர்ப்பெருக்கைக் கூறுகின்றார்.

ஆழ்வார்களில் ஒருவரான தொண்டரடிப்பொடி ஆழ்வார் "கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டுப் பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம்" என்று காவிரி, கங்கையை விடப் புனிதமானது எனப் பாடுகின்றார்.

## காவிரி நாடு

பெரிய புராணம் "பொன்னி நதி, இறைவனை வழிபட்டுச் செல்வதால் இறையன்பரைப் போன்று விளங்குகிறது." எனப் பாடும்.

> சையமால் வரைபயில் தலைமை சான்றது
> செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
> வையகம் பல்லுயிர் வளர்த்து நாள்தொறும்
> உய்யவே சுரந்தளித்து ஊட்டும் நீரது.

என்று பெரிய புராணத்தில் சேக்கிழார் காவிரியை வளர்ப்புத் தாயாகக் காட்டுவர். அயோத்தி நாடு பெற்றிருந்த வளம் பற்றிக் கூறும் கம்பன், அது "காவிரி நாடு போன்ற கழனி நாடு" என்று போற்றக் காணலாம்.

## புராணங்களும் போற்றின!

புராண நூல்கள் பலவும் காவிரியின் பெருமை கூறுகின்றன. திருநாகைக் காரோணப்புராணம், கும்பகோணப் புராணம், கபிலை கதை, பிரபுலிங்க லீலை ஆகியன காவிரியின் வளத்தை எடுத்துரைக்கின்றன. காவிரிப் புராணம் என்னும் நூல் காவிரி மலையிடைத் தோன்றிச் சோழநாட்டில் நடந்து

கடலடையும் நிலையினைக் கூறுகின்றது. (இணைப்பில் காண்க). மண்ணிப்படிக் கரைப்புராணம், ஆற்றூர்ப்புராணம், அம்பர்ப் புராணம், கந்த புராணம், விநாயக புராணம் ஆகிய புராண நூல்களும் வற்றாத நீர்வளமுடைய காவிரியின் இயல்பை எடுத்துரைக்கின்றன. (இணைப்பில் காட்டப்பட்டுள்ளன).

### பாரதி பாடினார்!

பிற்காலத் தமிழ்நூல்களிலும் காவிரியாற்றின் நீர்ப் பெருக்கமும் அதனாற் பெறப்படும் நிலவளமும் மிகுதியும் கூறப் படுகின்றன.

"காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி என
மேவிடும் ஆறு பலவோடி
மேனி செழித்த தமிழ்நாடு."

எனப் பாரதியார் பாடுவர். "கங்கையைப் போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்." என்பர் பாரதிதாசன்.

### பாவேந்தர் பாடினார்

பாரதிதாசன் 'குடும்ப விளக்கு' என்னும் நூலில்

"விசை வண்டி ஏறினார் இரண்டு பேரும்
விரைகின்ற காவிரியின் வெள்ளம் போலே"

எனப் பாடுவர். அவர்தம் ஏற்றப்பாட்டில் "கரும்பு தரும் சாறோதம்பி காவிரியின் ஆறு." என்பர்.

### நாவல்களிலும் நம் காவிரி!

கவிதை நூல்களேயல்லாமல் நாவல்களிலும் சிறுகதைகளிலும் காவிரி இடம்பெற்றிருக்கின்றது. அகிலன், தி. ஜானகிராமன், கல்கி ஆகிய பலர் காவிரியைக் களமாக வைத்துப் பற்பல காட்சிகளைத் தம் நாவல்களில் புனைந்துள்ளனர். கல்கியின் பார்த்திபன் கனவும் பொன்னியின் செல்வனும் காவிரியின் வளமிக்க இயல்பினைக் காட்டுவன.

## எத்தனையோ நூற்றாண்டுகளாக!!

*காவிரியால் தமிழகம் பெற்ற உற்பத்திப் பெருக்கம் எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது.*

*புனல்பரந்து பொன்கொழிக்கும்*
*விளைவறா வியன்கழனி*

*எனத் தொடங்கிப் பட்டினப்பாலை என்ற நெடும்பாட்டு, காவிரியின் நீரால் உற்பத்தியாகும் பொருள்களின் மிகுதியைப் பாடுகின்றது. "கரும்பின் பாகிலிருந்து உண்டாகும் புகை, வயல்களில் உள்ள நெய்தற் பூக்களை வாட்டும். காய்த்த செந்நெற் கதிரைத் தின்ற எருமைகள் நெற்கூடுகளின் நிழலில் உறங்கும். வாழை, கமுகு, மஞ்சள், மா, பனை, சேம்பு, இஞ்சி ஆகியன வயல்களில் மிகுதியாக விளையும். பெண்கள் நெல்லைக் காய வைத்திருக்கும் முற்றங்களை நோக்கி வருகின்ற கோழிகளை விரட்டத் தம் காதிலிருக்கும் பொன்னாலாகிய தோடுகளைக் கழற்றி வீசுவர். அவை மாலையில் சிறுவர்களின் சிறிய நடைவண்டிகளை ஓடாமல் தடுக்கும்." என்றவாறு செல்வச் செழிப்பு மிகுதியாக இருப்பதற்குச் சோணாட்டின் உணவு உற்பத்தியே காரணமாகும்.*

## சோறுவடிக்கும் கஞ்சி....!

*சோழநாட்டின் அட்டிற் சாலைகளில் சோறு வடிக்கப் பெருகும் கஞ்சி ஆறுபோல ஓடும் என்று இந்நூலில் கூறப்படும். பொருநராற்றுப்படை என்ற நெடும்பாட்டு "நீரை எப்பொழுதும் தன்னிடத்தேயுடைத்தாகிய தண்ணிய மருத நிலம் சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய - ஒன்றான பல ஊர்களை யுடைய நாடு" என்று கூறுவதைக் காணலாம். "ஒவ்வொரு மா நிலத்திலும் திடர்தோறும் நெற்கூடுகள் பொருந்திய சோழநாடு." என்று இப்பாடல் குறிப்பிடும்*

*"சாலிநெல்லின் சிறைகொள் வேலி*
*ஆயிரம் விளையுட் டாகக்*
*காவிரி புரக்கும் நாடுகிழ வோனே"*

*என்று பொருநராற்றுப்படை கூறும். இதன் கருத்து "ஒரு வேலிக்கு ஆயிரம் கலம் விளையும் வண்ணம் காவிரி*

பாதுகாக்கும் நாட்டை உடையவனே.'' என்பதாகும். ஒரு யானை படுக்கும் இடமானது ஏழுயானைகளுக்குரிய விளைவை உண்டாக்கும் எனப் புறநானூறு (40) காவிரி நாட்டின் வளம் கூறும். நிலமே தாங்காத விளைச்சலைக் காவிரி கொடுப்பதாகச் சிலப்பதிகாரம் (6:30 - 2) குறிப்பிடுகிறது.

## காவிரியே காரணம்

நெல், கரும்பு, வாழை, மா, பலா, மிளகாய், எண்ணெய் வித்துக்கள், பருத்தி எனப் பலவற்றையும் விளைக்கும் காவிரி சோணாட்டில் வெற்றிலைப் பயிர் மிகுதியும் விளையத் தன் வற்றாத நீர் வளத்தை அளிக்கிறது. ''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்.'' என்றார் தேசியகவி பாரதியார். தமிழகத்தின் உணவுத் தன்னிறைவுக்குக் காவிரியே காரணமாகும்.

காவிரியாற்றால் தமிழர்தம் பொருளாதாரநிலை விரிவுடையதாக விளங்கியது. சில பகுதிகளில் முப்போகமும் பலபகுதிகளில் குறுவை, சம்பா என இருபோகமும் அளிக்கும் நீர் வரவுடையதாக இருந்தது. இவ்வாறு தமிழகத்தில் 768 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்யும் காவிரி, தன் வழிக் கரையில் உள்ள ஒசூர், பெண்ணாகரம் தொடங்கிக் காவிரிப்பூம் பட்டினம் வரை பல ஊர்களின் வளத்திற்கும் வருவாய்க்கும் காரணமாக அமைந்தது. இப்பகுதியினர் எல்லாரும் தம் வாழ்வுக்கு வானத்தைப் பார்க்காமல் காவிரியைப் பார்ப்பவர்கள். நிலக்கிழார்களின் செல்வ வாழ்க்கையும் கோயில் திருவிழாக்களும் விருந்தோம்பலும் ஈகையும் இந்த நிலத்தின் இயல்புகளாக செய்தற்குக் காவிரியே காரணம்.

## தண்ணீரும் காவிரியே!

சைவ வைணவப் பெருங்கோயில்கள் காவிரிக்கரையூர் களிலே அமைந்து சமயம், இலக்கியம், கலை ஆகியன வளரப் பெருங் காரணமாய் இருந்திருக்கின்றன. திருப்பனந்தாள், திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய சைவ மடங்கள் இவ்வாற்றின் கரையிலே அமைந்திருக்கின்றன. ஆறுமாத உழைப்பில் விளைவு நன்கு கிடைத்த நிறைவில் பொருளாதாரச் சோர்வில்லாமல்

எஞ்சிய ஆறு மாதத்தை இன்பப் பொழுது போக்குகளில் சோணாட்டினர் செலவழிக்கக் காரணமாய் அமைந்தது காவிரியேயாகும். 'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே மண்ணாவதும் சோழ மண்டலமே' என்று புலவர் பாடும் அளவு இதன் வருவாய்க்குக் காரணமாய் அமைந்தது காவிரியாகும். விளைவில் ஆறில் ஒரு பகுதி வரியாகக் கொள்ளப்பட்டு அரசு நிருவாகப் பணிகளுக்கு அவ்வருவாய் செலவிடப்பட்டிருக்கிறது.

## காவிரியே கருவூலம்

சோழநாடு வேறுவகையான தொழில்களைப் பெருக்காமைக்கும் இக்காவிரியின் வளமே காரணமாகும். காவிரியாறு கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை திருவையாற்றிலிருந்து கண்டியூர் வரை பரவியிருந்தது. கண்டியூர், திருச்சோற்றுத்துறை ஆகிய தலமிரண்டும் காவிரிக்கரையிலேயே இருந்திருக்கின்றன. குடமுருட்டியாறு அக்காலத்தில் இல்லை. அது காவிரியிலிருந்து குடந்தைக்கும் கிழக்கே பிரிந்து சென்றது. அதற்கு அப்போது கடுவாய் எனப்பெயர். இவ்வாறு பரந்து சென்ற காவிரியில் நீர்சுருங்கிய காலத்தில் பஞ்சம் ஏற்பட்டதற்குச் சான்று உண்டு. இராசராச சோழனின் 24-ஆம் ஆட்சியாண்டின் கல்வெட்டு, முந்திய ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் கோயில் சொத்தைச் சிலர் சூறையாடியது பற்றிய வழக்கைக் குறிக்கின்றது. ஆகவே, காவிரி வற்றாது ஓடும் வரையில், தமிழகப் பகுதிகளில் பஞ்சம் இல்லாமலிருந்தது அறியப்படும்.

## நாட்டுப் புறப்பாடல்

மச்சுமச்சா நெல்விளையும்
மகுடஞ்சம்பா போரேறும்
குச்சுகுச்சா நெல்விளையும்
குமுடஞ்சம்பா போரேறும்

என்று நெல்விளையும் சிறப்பை நாட்டுப்புறப்பாடல் ஒன்று காட்டுகிறது. காவிரி, வாய்க்கால் வழியே பாய்ந்து மிளகுச் சம்பா விளைந்ததனை மற்றொரு நாட்டுப்புறப்பாடல் காட்டுகின்றது.

*முத்துமழை பேயும்*
*மொத வாய்க்கால் தண்ணிவரும்*
*மொத வாய்க்காத் தண்ணிக்குத்தான்*
*மொளவு சம்பா நெல்விளையும்*
*மொளவு சம்பா நெல்லுக்குத்தான்*
*மொதலாளியா நானிருந்தேன்*

என்று பழைய செல்வநிலையைக் காவிரிக்கரைப் பெண்ணொருத்தி கூறிப் புலம்புகிறாள். பண்டமாற்றுப் பொருளாதார அடிப்படையில் வாழ்ந்த சமூக அமைப்பில் மலைமலையாய் நெற்கூடுகள் மலிந்து நின்ற செய்தியைப் பெரிய புராணம் போன்ற நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

## காவிரிக்கரைப் புலவர்கள்

காவிரிக்கரையின் கலைவாழ்வு பாரிசு நகரத்துக் கலைப் பெருமையை விஞ்சியது. எந்த ஆற்றின் கரையிலும் இத்தகைய கலை வளர்ச்சியைக் கண்டிருக்க முடியாது.

ஆவியார்
ஆலூர்கிழார்
ஆலூர்மூலங்கிழார்
இடைக்காடர்
இரும்பிடர்த்தலையார்
உறையூர் இளம்பொன் வாணிகனார்
உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
உறையூர் முது கூத்தனார்
எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார்
ஐயூர் முடவனார்
ஐயூர் மூலங்கிழார்
கருவூர்க் கதப்பிள்ளை
கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார்
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்
காவிரிப்பூம்பட்டினத்துப்பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்
குடவாயிற் கீரத்தனார்

கோப்பெருஞ்சோழன்
சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்
சோழன் நல்லுருத்திரன்
சோழன் நலங்கிள்ளி
பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்
பேரெயின் முறுவலார்
பொத்தியார்
வெண்ணிக்குயத்தியார்
வெள்ளைக் குடிநாகனார்

ஆகிய சங்ககாலப் புலவர்கள் காவிரிக்கரை ஊரினர்.

## காவிரிக்கரைப் பாவலர்

இவர்களுக்குப் பின்னரும் கவிதையாறும் காவிரிபோல் வற்றாமலே ஓடிக் கொண்டிருந்தது. தேவாரம் பாடிய திருஞான சம்பந்தர், ஆழ்வார்களில் ஒருவரான தொண்டரடிப் பொடியாழ்வார், பெரியபுராணம் பாடிய சேக்கிழார், இராமாயணம் பாடிய கம்பர், ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார், புகழேந்தியார் ஆகியோர், வரலாற்றில் மறையாத வான்புகழ் பெற்ற காவிரிக்கரைப் பாவலர்கள்.

## பிற்காலத்தில்

பிற்காலத்தில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சீர்காழி அருணாசலக்கவிராயர், கோபாலகிருட்டிண பாரதியார், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோரும் இன்னும் பலரும் காவிரிநாட்டில் கவிதைக் கலை வளர்த்தனர். பட்டினத்தார், தாயுமானவர், ஊத்துக்காடு வேங்கட சுப்பையர், தியாகையர், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாத்திரி ஆகியோரும் அம்மண்ணைப் பாடிப் பாடிப் பரவிய பெரியோராவர்.

திருவரங்கநாதர் திருக்கோயில், குடந்தை நாகேச்சுரன் கோயில், தாராசுரம் கோயில், திருபுவனக் கோயில், தஞ்சை இராசராசேச்சுரம், கங்கை கொண்ட சோழீச்சுரம், சீர்காழி

தோணியப்பர் ஆலயம், சிதம்பரம் நடராசர் ஆலயம் எனப்பல ஆலயங்கள் சிற்ப ஓவியக் கலைகளின் இருப்பிடமாய் விளங்குகின்றன.

வளமை இன்புறு சோழமண்டல
வாழ்க்கை காரணமாகவே
கருது செம்பொனின் அம்பலத்திலோர்
கடவுள் நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு
கருணைமாமுகில் துயிலுமே

என்று இலங்கை அரசன் ஒருவன் பாடுகின்றான். காவிரிக்கரை சிவப்பதிகளில் நடராசர் கலைப்படிவம், காண்பார் கண்ணும் மனமும் கவரும் ஒன்றாகும். வரலாற்றுப் பேராசிரியர் சத்திய நாதையர் "The Nataraja type (apparently originating in this period) is one of the best creations of Indian art....... thus revealing the witty and simultaneity of the Five activities (Panchakriyas) production, Maintinance, Destruction, Empodiment and Release) which the symbolism specially designates (History of India Vol 1. p. 484) எனக் கூறுகிறார்.

## வீடெல்லாம் கலைவிளக்கம்!

வாய்ப்பாட்டு, நாகசுரம், மத்தளம், பரதம் ஆகிய பல்வேறு இசைப்பிரிவுகளிலும் வல்லவர்களைத் தோற்றுவித்தது காவிரிக்கரைப் பகுதியாகும். தமிழைக் கால வெள்ளத்தில் அழிந்து போகாமல் காப்பாற்றிய உ.வே. சாமிநாதையர் இவ்வாற்றின் கரைப் பகுதியினர். வீடெல்லாம் கலைவிளக்கமாகச் சோணாடு துலங்குவதற்குக் காவிரியே காரணம்.

## பொன்னியணை கண்டார்

காவிரியின் நிர்வாகம் வரலாற்று நெறியில் காணத்தக்க ஒன்றாகும். சங்ககால வேந்தர்களில் ஒருவனாகிய கரிகாலன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காவிரியின் வெள்ளம் கொள்ளிடத்தில் வீணாகச் சரியாமல் அணைகட்டிக் காத்த செய்தியினைக் கலிங்கத்துப் பரணி, குலோத்துங்க சோழன் உலா, பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்கள் குறிக்கின்றன.

முழுகுல நதிக்கு
அரசர் முடிகொடு வகுத்த கரை
முகில்தொட அமைத்தது அறிவோம்

- குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்

எனக் கூறக் காணலாம். 'பொன்னிக்கரை கண்ட பூபதி' என்று விக்கிரம சோழன் உலா குறிக்கிறது. சோழ அரசர்கள் பொன்னியின் செல்வர் என்றும் காவிரிக் காவலர் என்றும் வழங்கப் பெற்றனர்.

## சுவையான வரலாறு

கி.பி.12 - ஆம் நூற்றாண்டு வரை தடையின்றி ஓடிவந்து கொண்டிருந்த ஆறு தடைப்பட்டது. காவிரி நீர் தடுக்கப்பட்டது. படைகொண்டு தடைநீக்கினர் தமிழர்!

இன்றல்ல................825 ஆண்டுகளின் முன் — அது ஒரு -
-சுவையான ஒரு வரலாறு

## வற்றாத ஆறும் வற்றியது!

இரண்டாம் குலோத்துங்கன் (1133-1150) மகன் இரண்டாம் இராசராசன் (1146-1163) பேரரசு செலுத்திய காலம். கருநாடகத்தைப் போசளன் முதலாம் நரசிம்மன் ஆண்டு வந்தான். காவிரியில் செயற்கை மலைகளை ஏற்படுத்தித் தமிழகத்திற்கு வரும் நீரைத் தடுத்தான் நரசிம்மன். காவிரியில் நீர் குறைந்தது. வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியும் பொய்த்தது. சோழநாட்டின் பாசனக் கால்வாய்கள் தூர்ந்தன. வளவன் நாட்டிலும்--வறுமை ஏற்பட்டது; 'பஞ்சந்தாங்கி' ஏரிகள் வெட்டப் பெற்றன; பயனில்லை.

## காவிரி கண்ட கருணைச் சோழன்!

இராசராசன் வாளாவிருக்கவில்லை. கருணையின் இருப்பிடமான அவன், கருநாடகத்தின் மீது படையெடுத்தான். தமிழகத்திற்குக் காவிரி நீர் உரிமையானது. அதைத் தடுக்க மைசூர் அரசுக்கு உரிமையில்லை. இந்திரனே, போசள வீரநரசிம்மதேவர் அரசுக்குத் துணையிருப்பினும் கவலையில்லை என்று போர்ப்பரணி பாடிப் புறப்பட்டான். முரசொலி முழங்கப் போர்

மூண்டது. சென்றான்..........போரிட்டான்......... வென்றான். அணைகளைத் தகர்த்தான். மீண்டும் காவிரி அணங்கு சோழனுக்கு உரிமையானாள்! கல்லணை எடுத்த கரிகாலன் பரம்பரை....... கங்கை கொண்டவன் மரபினன் காவிரி கொணர்ந்தான்! தமிழகம் அவனைப் பாராட்டியது!

## வரலாறும் கல்வெட்டும்

### வாழும் வரலாற்று ஏடுகள்

இராசராசன் காவிரி கண்ட சோழன், கரிகாலன், பொன்னிக்கு வழி கண்ட கண்டன் என்றெல்லாம் புகழப் பெற்றான். பெரும் போர்ச் செலவை ஈடுகட்டக் 'காவிரிக்கரை வினியோகம்' என்ற வரி விதிக்கப்பட்டது; மக்களே மகிழ்ந்து தந்தனர். பழங்காவிரிக் கால்களுக்குப் பதிலாகப் 'புதுக்காவிரிக் கால்கள்' வெட்டப்பட்டன. பல ஊர்களுக்குக் காவிரியின் பெயரால் பெயரிடப்பெற்றன. மேல்தலைக் காவிரிப் பூம்பட்டினம், காவேரிப்பட்டினம் என்பன அவற்றுள் சில.

### புலவர் நாவின் புகழ் உரைகள்!

அரசரின் சிறிய வெற்றிகட்கும் பெரும்பாட்டிசைக்கும் புலவர்கள், செயற்கரிய செய்து காவிரி கொணர்ந்த வெற்றியை விடுவார்களா? இச்சோழனின் அவைக்களப் புலவராகிய ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில்

'அலைகொள் வரங்கை வாராமல் மண்மேல்
அடைக்கின்ற குன்றூடு அறுக்கின்ற பூதம்
மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராச ராசன்கை வாள்என்ன வந்தே (549)

என்றும் அவரே இராசராசசோழன் உலாவில்
'சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழியிட்ட வாள்காண வாரீர்' (கண்ணி 85)

என்றும் குறித்துள்ளார்.

சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் இவ்வெற்றி, குறிப்பாகச் சுட்டப் பெற்றுள்ளது (எறிபத்த நாயனார் --8) அப்பாடல்

'பொன்மலைப் புலிநின் றோங்கப்
புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே யாக
அயல்வழி அடைத்த சோழன்'

என்பதாம்.

தொல்காப்பிய உரைமேற்கோள் பாடல் ஒன்றிலும் இவ்வெற்றி குறிக்கப் பெறுகிறது (புறத்திணை - 36 - நச்சினார்க்கினியர்)

"சைய-மலைச்சிறைநீர் வாட்கண்டன்
வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்"

என்ற பாடல் மூலமாக இலக்கியத்தைக் கண்டு மகிழ்ந்த மனம் இன்று ஏங்குகிறது. அஃது ஏன்?

## கல்வெட்டு கண்ட காவிரி!

பல கால நிலைகளிலும் ஏற்பட்ட பல்வேறு படையெடுப்புகள் காவிரியின் நீர்ப்பெருக்கைக் குறைக்கவோ தடுக்கவோ இல்லை. காவிரி வெள்ளம் ஆண்டாண்டு தோறும் வற்றாமலே இருந்திருக்கிறது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. மகேந்திரவர்ம பல்லவர் காலத்தில் திருச்சிராப்பள்ளி மலைக்கோவிலில் வெட்டப் பெற்ற கல்வெட்டு

"யாற்றை விரும்பும் இறைவன்.....தோட்டங்களையும்
விரும்பத்தக்க குளங்களையுமுடைய காவிரியாற்றைக் கண்டு
அவள்மீது காதல் கொள்வான் என்று மலையரையன் மகள்
ஐயமுற்றுத் தான் பிறந்தகத்தை விட்டு இம்மலை மீது நின்று
கொண்டு 'இவ்யாறு பல்லவனது' என்று சொல்லிக் கொண்டே
இருக்கிறாள்."

என்று கூறுகின்றது.

சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியின் பட்டயமொன்று,

"துள்ளிவிழும் கயல்மீன்களைக் கண்களாகக் கொண்ட காவிரி,
சாளுக்கியனது யானைகளின் மதநீர் விழுந்ததால் ஓட்டம்
தடைப்பட்டுக் கடலில் கலக்க இயலாததாயிற்று. புலிகேசியும்
பல்லவப் பனியைப் போக்கும் கடுங்கதிரவனாய்ச் சேர சோழ
பாண்டியரைக் களிப்புறச் செய்தான்".

என்று கூறுகின்றது. இத்தகைய பெருக்குடைய காவிரியின் நீர்ப் பயன்பாடு பற்றி கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுக்களின் வழியே பல செய்திகள் அறியப்படுகின்றன.

## கல்வெட்டுகள் காவிரி பற்றி தரும் செய்திகள்

### கல்வெட்டுகள் காட்டுகின்றன

,கி.பி.10 – ஆம் நூற்றாண்டு அளவிலேயே காவிரியாற்றின் கடைமடைப் பகுதியில், அதாவது இன்றைய தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி ஆறும் அதனுடைய பல கிளை ஆறுகளும் பெருமளவுக்குப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன என்பதைக் கல்வெட்டுகள் தெளிவாகக் காட்டுகின்றன. ஏராள மான சிறு சிறு கிளைக் கால்கள் இவ்வாறுகளிலிருந்து பிரிக்கப்பட்டு,பெரும்பாலான ஊர்களுக்குப் பாசனம் கொடுக்கப் பட்டது. எந்த ஊர் கல்வெட்டை எடுத்துக் கொண்டாலும் அந்த ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட கிளை வாய்க்கால்கள் இருந்தன என்ற செய்தி கிடைக்கும். இக்கிளை வாய்க்கால்கள் நீரோடுகால், பலாறு, கண்ணாறு என்று பலவாறு வழங்கப்பட்டன. வயல்களிலிருந்து நீரை வடிப்பதற்காகவும் தனிக்கால்கள் இருந்தன என்று தெரிகிறது. இந்த வடிகால்கள் வதி என்று அழைக்கப்பட்டன.

### .பெரும் பொறுப்பு

வாய்க்கால்களைப் புதிதாகத் தோண்டி அமைப்பதோடு, இருக்கும் வாய்க்கால்களைப் பராமரிப்பது ஒரு பெரிய வேலையாக அரசுக்கும் நாட்டு மன்றங்களுக்கும் ஊர் மன்றங் களுக்கும் இருந்தன. ஒவ்வோர் ஆண்டும் காவிரி பெருகிப் பெருவெள்ளம் ஏற்பட்டுக் கரைகள் உடைந்தும் மணலால் கால்கள் தூர்ந்தும் சேதம் ஏற்பட்ட வண்ணம் இருந்தன. ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் கால்களைத் தூர் எடுப்பதும் கரைகளை உயர்த்துவதும் பெரும் பொறுப்பாகக் கருதப்பட்டது.

### கரிகாலன் கரை

முதன்முதல் காவிரியின் கரையை உயர்த்திய பெருமை சங்ககால அரசனான கரிகாலனைச் சேரும். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தெலுங்குச் சோழ அரசனான புண்ணிய குமாரனின் மாலேபாடு செப்பேடுகளில் முதன் முறையாக இச்செய்தி குறிப்பிடப்படுகிறது. அதற்குப் பின்னால்

செப்பேடுகளும் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் இச்செய்தியைத் தவறாது குறிப்பிடுகின்றன. எடுத்துக்காட்டாக, திருநெய்த்தானத்திலுள்ள பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றில் 'கரிகாலன் கரை' சுட்டப்படுகிறது.

பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பே பல பெரிய கிளை வாய்க்கால்கள் இருந்தன என்பதற்குக் கல்வெட்டுகள் சான்றுகள் தருகின்றன. திருச்சி மாவட்டத்தில் பெருவளவன் வாவித்தலை அல்லது வாய்க்கால், பைங்கேணி, தஞ்சை மாவட்டத்தில் அரிசில், கடுவாய், மண்ணியாறு, வெண்ணாறு, பழங்காவிரி முதலியன கல்வெட்டுகளில் அடிக்கடி சுட்டப்படுகின்றன.

கி.பி.9, 11-ஆம் நூற்றாண்டுகளில் சோழ மன்னர்கள் பல வாய்க்கால்களைப் புதிதாக அமைத்தார்கள் என்பதற்குச் சுந்தர சோழவாய்க்கால், மும்முடிச் சோழப் பேராறு, சிங்களாந்தகன் வாய்க்கால் முதலிய ஏராளமான பெயர்கள் சான்று பகர்கின்றன.

## அணைகள் கட்டப்படுகின்றன

நீர் அருகிய காலங்களில் தலைமை வாய்க்கால்களிலிருந்து கிளைவாய்க்கால்களுக்கு நீர் ஏற்றுவதற்காகக் குரம்பு எனப்பட்ட தற்காலிக அணைகள் கட்டப்பட்டன. இந்தக் குரம்புகள் கட்டுவதற்கும் கால்களின் தலைப்பகுதியைப் பராமரிப்பதற்கும் தலைவாயர் அல்லது தலைவாய்ச் சான்றார் என்றும் ஓடமுடையார் என்றும் பணியாளர் தொகுதிகள் இருந்தன என்ற செய்திகள் கிடைக்கின்றன. சோழநாட்டின் உயிர்நாடியான காவிரியாற்றைக் காப்பாற்றுதல் எல்லோருடைய கடமையாகக் கருதப்பட்டது. ஆற்றின் கரையை அழிப்பது ஒரு பெரிய பாவமாகக் கருதப்பட்டது. அண்மையில் தாராசுரத்தில் கிடைத்த ஓர் ஒன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டில் 'காவிரி குலை குத்திய பாவம்' அறத்தை அழிப்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகச் சுட்டப்படுகிறது.

## வாய்க்கால் பற்றிய செய்திகள்

*எடுத்துக்காட்டுகள்:*

**திருஎறும்பூர் (திருச்சி மாவட்டம்):**

சீகண்ட வாய்க்கால், மூன்றாம் கண்ணாறு
கோயில்தேவராயன்பேட்டை (தஞ்சைமாவட்டம்).

காமதேவி வதி, இரண்டாங்கண்ணாறு, மனோரம வாய்க்கால், நாரதொங்கி வதி சீகண்டவாய்க்கால், ஆதித்த வழி, ஆறாங்கண்ணாறு, சோழசூளாமணி வாய்க்கால், இராசகேசரி வாய்க்கால்.

திருப்பராய்த்துறை (திருச்சி மாவட்டம்)

வீரகாமுக வதி, உத்தமசீலிவாய்க்கால், ஆதிச்ச வாய்க்கால்.

செம்பியன் மகாதேவி (தஞ்சை மாவட்டம்)

செம்பியன் மாதேவி வாய்க்கால், கண்டாராதித்த வாய்க்கால், பழூர் நக்க வாய்க்கால், பராந்தகமாதேவி வாய்க்கால், மாதேவடிகள் வாய்க்கால், தேலூர் வாய்க்கால்.

கரந்தைச் செப்பேடுகள் (பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்)

புள்வேளூர் வாய்க்கால், தருவாய்க்காலான மும்முடிச் சோழ பேராறு, வெண்ணில் நீரோடுகால், சிங்களாந்தகன் வாய்க்கால், சுந்தரசோழ வாய்க்கால், சோற்றுத்துறை வாய்க்கால், குஞ்சிரமல்லப் பெருவாய்க்கால்.

## சீரங்கம் கல்வெட்டுகள்

கேரளாந்தக வாய்க்கால், விளத்தூர் (நாட்டு) வாய்க்கால், செயங்கொண்ட சோழ வளாகத்து வாய்க்கால், திரைலோக்கிய மாதேவிவதி விக்னேசுவர வாய்க்கால், ராசேந்திரசோழ வாய்க்கால், உத்தம சோழப் பேராறு.

## வெள்ளமும் அதன் விளைவுகளும்

திருமங்கலம் (கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்):

விக்கிரமசோழப் பேராறு பல இடத்திலும் இடித்து அழிவான நிலம்..

திருகாட்டுப்பள்ளி (தஞ்சாவூர் மாவட்டம்)

ஆறு உடைந்து மணலிட்டு பயிர் செய்ய உண்ணாத.......

திருவெண்காடு (தஞ்சாவூர் மாவட்டம்)

*காவேரி ஆறு உடைந்து மடுவாய் நீர்நிலையான நிலம்......*

சீரங்கம் (திருச்சி மாவட்டம்)

*1. தண்டுறையிலும் காரைக்குடியிலும் ஆறுடைந்து மணலிட்டு நூறு சம்வத்சரம் பயிரேறாது பாழ் கிடந்த......*

*2. காவேரி குலை உடைந்து மண்ணும் குட்டமும் இட்டு.........*

## பிற செய்திகள் (பெருந்தொகைத் திரட்டிலிருந்து)

1. *தொக்க கலியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில்*
*மிக்க கரிகால வேந்தனும்தான் - பக்கம்*
*அலைக்கும் புகழ்ப்பொன்னி ஆறுகரை கண்டான்*
*மலைக்கும் புயத்தானும் வந்து.*

*3101*
*3090*
*கி.மு. 11*

*(பாட-பேதம்-தொக்க சகனில் தொளாயிரத்துத் தொண்ணூற்றில்) 990 78-1068.*

2. *அஞ்சின் முடிகவித்து ஐம்பத்து மூன்றளவில்*
*கஞ்சிகா வேரிக் கரைகண்டு - தஞ்சையிலே*
*எண்பத்து மூன்றளவு மீண்ட இருந்தேதான்*
*விண்புக்கான் தண்புகார் வேந்து*

3. *"தண்ணீருங் காவிரியே" - தனிப்பாடல்*
*"ஆறே - காலமறிந்து உதவும் காவிரி தாமே" - தனிப்பாடல்*

4. *உச்சங்கோல் எண்கோல் உயரம் பதினாறுகோல்*
*எச்சம் பிரிவாய் இருபதுகோல் - தச்சளவு*
*மண்கொள்ளக் கொண்டகோல் எங்கோல் வளவர்கோன்*
*கண்கொள்ளக் கண்ட கரை (-- தனிப்பாடல்)*

**5. காவிரி என்றும் "வற்றாது"**

*கற்பகமோ ஒக்கும் கணுவில்லை காவேரி*
*மற்புனல்போ லாம்ஒருகால் வற்றாது - நற்புகழ்சேர்*
*நந்திகை மன்னு புலவோர் வசைதீரக்*
*கந்தகோன் வந்துதவும் கை*

**6. காவிரி பாதிநாள் "கொடுக்கும்"**

*கன்னன் அரை நாள் கொடுப்பான்; காவேரி பாதிநாள்;*
*அன்னை முலைகொடுப்ப தக்காலம்; - பன்னும்*
*கலைவைத்த வேரூர்வாழ் கம்பனெனும் கொல்லன்*
*உலைவைத்தால் தான்ஊர் உண்ணும்.*

*1.* இரவிகோதையின் அனுமன்பள்ளிச் செப்பேட்டில் அவனுக்குரிய பட்டப் பெயராகக் 'காவேரி வல்லவன்' என்ற பட்டப்பெயர் ஒன்று குறிக்கப் பெறுகிறது. காவிரியை முக்கிய இடமாகக் கருதிக் கூறப்பெற்றுள்ளது.

*2.* சோழநாட்டைப் பிரித்துக்கூறக் காவிரி வடகரை, காவிரித் தென்கரை என்று குறிக்கப்பெற்றது.

*3.* கொடைகள் 'கல்லும் காவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரை' நிலவவேண்டும் என்று கல்வெட்டு, செப்பேடுகளில் எழுதப்பெற்றன.

(சேதுபதி செப்பேடுகள் *26, 34, 73, 89*)

*(காவிரி இல்லாத பகுதிகளிலும் எழுதப்பெற்றது--அதன் சிறப்பைக் காட்டுகிறது.)*

*4. 1781* - இல் முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி காத்ததேவர் குண்டாற்றை அடைத்து வெட்டிய கால்வாய்க்கு (இராமநாதபுரம் மாவட்டம்) இரகுநாதக் காவேரி என்று பெயர் வைத்தார்.

(சேதுபதி செப்பேடு 74)

*5.* பாண்டியர் செப்பேட்டில் பாண்டியன் படை

*"பூவிரியும் பொழிற்சோலைக்*
*காவிரியைக் கடந்திட்டு"*

என்று பெற்ற வெற்றி புகழப்பெறுகிறது.

# காவிரி பற்றிய வருணனை- புராணங்கள்

புண்ணியம் பயத்த வன்றிப்
    பொருவறப் பல்லா றோடிக்
கண்ணிய பயிர்வ ளர்க்கும்
    கணக்கிலாக் குடிஞை யுள்ளும்
எண்ணிய பொன்னி போலொன்
    றிலையது தழுவப் பெற்றுத்
திண்ணிய வளத்தா லோங்கிச்
    செழிப்பது சோழ நாடு.

பலசம யத்தின் கண்ணும்
    பயினர்செய் வணக்க மெல்லாம்
பலதலை யணிமா தேவன்
    பாலேசென் றுறுதல் போலப்
பலநல நிலத்தின் கண்ணும்
    பசுமுகில் பொழிநீ ரெல்லாம்
பலபிரி வுடைக்கா வேரிப்
    பாலேசென் றுற்ற தம்மா.

உற்றபெரு வனங்காக்கும்
    உபேந்திரனாகிய விளவற்
பற்றமையுங் கருத்துடைய
    பாக சாதன னடுத்த
செற்றவளப் பெருமருதந்
    தெய்வமாய்ப் புரப்பானென்(று)
அற்றமின்முன் னுறவுமதித்
    தவாய்ப்பெருகுங் காவேரி

பெருவருவா யுடையார்கள்
    பேணாம விருக்கவுமூழ்
த்தருவருவாய் பலவுண்டாற்
    றவாப்பெருக்கின் மிகச்சிறந்த
பொருவருமா நதியாய
    பொன்னியினாம் பிரவதிமுற்

பருவருமா றொழிநதிகள்
　　பலவந்து கூடிடுமால்.

அறிவுடைய பெருஞ்செல்வ
　　ரமைதருநற் பொருளனைத்துஞ்
செறிவுடைய பயன்படுமா
　　செலுத்துவார் பல்வழியும்
நெறியுடைய காவேரி
　　நெடுநீக்கம் அத்தனையும்
குறியுடைய பன்மதகுங்
　　கொள்ளைகொளச் செலுத்திடுமோ.

கலங்கனீர் தெளிதருதல்
　　கண்டுமறு நாட்கவிழ்த்துத்
துலங்கமா ணவரறிவின்
　　றுணைதேர்ந்து நூல்பொருத்தும்
இலங்குமா சிரியரென
　　விளமுளையி னளவறிந்தே
அலங்குநீர் பாய்த்திடுதோ
　　றவாய்க் கொடுக்குங் காவேரி.

(திருநாகைக் காரோணப் புராணம்,
திருநாட்டுப் படலம், பா.4, 27, 61, 62, 63, 71)

நலந்தரு சோழ நாடே
　　நாடுநீர் நாடென் றோத
வலந்தரு மேது வாகி
　　மன்னுயி ரனைத்து மோம்பி
குலந்துர விண்ணு ளாருங்
　　கூடிவந் தாடப் பெற்று
நிலந்தரு திருவிற் பொங்கி
　　நிகழ்வது பொன்னி யாறு

(கும்பகோணப் புராணம் சு, 1505, திருநாட்டுப் படலம், பா. 60)

குடவரை யாதி யந்தங்
　　குணகடற் குணக்கோ டாக்கித்

தடவரை யிடையே நேரிற்
றலைகிழக் காகத் தள்ளி
இடவரை யறைப்ப டாம
லெங்கணுங் கால்கொண் டோடி
வடவரை தகர்த்துச் சிந்து
மாண்பிற்பொன் னிறைக்கும் பொன்னி. 61

வரையற வுருட்டித் தள்ளி
மதமலை யெடுத்தெறிந்து
புரையறப் பலவா றெய்திப்
பொலிமணி பலவி றைத்துத்
தரையறக் கிழித்துச் சென்று
சலதியைக் கலக்கும் பொன்னி
கரையறப் பெருகு மென்று
கட்டுரைத் திடலென் னாமால். 62

மலைபடு வயிர நீல
மரகதம் பதும ராகம்
நிலைபடு புருட ராகம்
நிரம்பமற் றனைத்தும் வாரித்
தலைபடு புகன்ற காவேரி
சமுத்திரந் தூர்த்த வாலே
விலைபடு மணிகட் கெல்லாம்
வீரையர் கரமா யிற்றே. 63

வரையெலாம் பொலியத் தோற்றும்
வைரமுற பலவும் வாரிக்
கரையெலாஞ் செறியச் சிந்திக்
களிற்றுவெண் கோட்டான் மொத்தித்
திரையெலாந் தவழ வீசிச்
சேறலாற் பொன்னி நீத்தம்
உரையெலாம் பொலியுங் கோட்டிற்
குறுதிசெய் தொழுகல் போலும். 64

வரையிடைப் பிறந்தா னந்த
மாக்கட லணைத லானும்

புரைதவிர்த் துயிர்க்கூழ் மல்கப்
புரவுசெய் திடுத லானும்
விரைசெலற் கங்கை யாற்றின்
மேவிடு பெருமை யானும்
பரையெனப் படுமா நித்தம்
பரப்பிய புகழ்க் காவேரி. 65

ஒருமுனி கரகம் நின்றும்
உம்பர்தங் கோமான் வேண்ட
வருபுனற் பெருங்கா வேரி
மண்ணகத் தரசன் வேண்டப்
பருகிய முனிவன் காதின்
வழிவரு பண்பிற் றாகிப்
பெருகுமோர் நதியொப் பென்று
பேசுதன் மடமைப் பாற்றே. 66

மன்னிய புகழ்க்கா வேரி
வந்துவந் தாடு வார்க்குத்
துன்னிய புறமா சென்னத்
தோன்றக மாசும் போக்கிப்
பன்னிய வுடனே யோடு
பவநோ யுந்தொலைத் தானந்தத்
தண்ணிய மில்லா வண்ணஞ்
செலுத்துமே லறைவ தென்னோ. 67

தராதலத் துயிர்க ளோம்புந்
தகைப்பெரும் புனற் காவேரி
விராவிரு கரையின் பாலும்
விரும்புபல் கோயில் கொண்டே
அராவணி சடையா னெங்கள்
அம்மையோ டமரு மென்னிற்
புராதன மாய்வந் தநதிப்
புகழது புகலற் பாற்றோ. 68

போர்முகத் தெதிர்ந்து செல்லும்
பொருநர்போற் சில்மீன் வெள்ளத்

*தேர்முகத் தெதிர்ந்து செல்லு*
*மெதிர்செலும் வலிய வாரிப்*
*பார்முகத் தொழுகுஞ் சின்மீன்*
*வீரவான் மருவு வாரிற்*
*கார்முகங் கிழித்து மீது*
*கதித்தெழும் பொன்னி யாற்று.* 69

*ஒருபெருந் தாகம் பூதம்*
*ஒழிதர வுய்த்த தென்பார்*
*ஒருபெரு நதியு மம்மையு*
*ஒற்றுமன் புலகந் தேற்ற*
*ஒரு பெரு மான்முன் புயக்க*
*உறுவட வாலி யாறும்*
*ஒருபெருங் காவோங் யாவென்*
*றுரைசெயப் பெருகும் பொன்னியே.* 70

*சென்ன மிகுபல் வாய்ச்சியர்கள்*
*சிவணு மிலைசால் குடில்க டொறுங்*
*கண்ண னொருவ னாங்காங்கு*
*களிப்பப் புகுந்த வாறேபோல்*
*விண்ண மளவு குடுமிவரை*
*மிசைநின் றிழிந்து புடவிதவழ்*
*வண்ண மிகு காவ ரிப்புனல்பன்*
*மதகு தோறும் போய்ப் புகுந்ததால்* 71

*தண்ணீருங் காவேரி தார்வேந்*
*தனனுஞ் சோழன் றாவா மேன்மை*
*மண்ணுவதுஞ் சோழ மண்டல மேயென்று*
*ரைத்த வார்த்தை வாளாற்*
*றெண்ணீர் வையகத்துள்ள பிறநாட்டுப்*
*புகழெல்வாஞ் செகுத்துத் தீமை*
*யொண்ணாத சோணாடு பொலியு மெனில்*
*தன்வள முற்றுரைப்பார் யாரே* 116

குவலையமென் காவேரிசூழ் கொங்குவள நன்னாடன்

- *கபிலை கதை சு.எண், 1479 பா.3*

*திசையான தீபத்தி காவேரிசூழ் சோழமண்டலம்*

*-கபிலை கதை, சு.எண் 1479, பா.8*

*சுரர்கு வாதிபன் தூய்மலர் நந்தனம்*
*பெருக வார்கடற் பெய்த வயிற்றினோன்*
*கரக நீரைக் கவிழ்த்த மதகரி*
*சரணம் நாளுந் தலைக்கணி யாக்குவாம்*

*– பிரபுலிங்க லீலை, சு.எண் 180 காப்பு*

## பெரிய புராணத்தில் காவிரி

*கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்*
*சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி*

*– பெரிய. திருநாட்டுச் சிறப்பு-1*

*ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு*
*பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி*

*– பெரிய. திருநாட்டுச் சிறப்பு-2*

*வாவி யிற்பொலி நாடு வளந்தரக்*
*காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால்*

*– பெரிய.திருநாட்டுச் சிறப்பு-9*

*காடெல்லாம் கழைக்கரும்பு*
*காவெல்லாம் குழைக்கரும்பு*
*மாடெல்லாம் கருங்குவளை*
*வயலெல்லாம் நெருங்குவளை*
*கோடெல்லாம் மடஅன்னம்*
*குளமெல்லாம் கடல் அன்ன*
*நாடெல்லாம் நீர்நாடு*
*தனைஒவ்வா நலமெல்லாம்*

*– பெரிய. திருநாட்டுச் சிறப்பு (17)*

*கானார்க்கும் மலர்த் தடஞ்சூழ் காவிரி*

*– தடுத்-115*

வம்புலா மலர் அலைய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப்பொன்னி

— தடுத்-116.

சென்னி வெண்குடை நீடந பாயன்
திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல்வ ளந்தர இயல்பினில் அளித்துப்
பொன்னி நீர்நதி மிக்க நீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெடும் பெருந் தீர்த்தமுன் னுடைய
நலஞ்சிறந்தது வளம்புகார் நகரம்.

— இயற்பகை -1

சீரில் நீடிய செம்பியர் பொன்னிநன் நாட்டு

— அமர்நீதி -1

வாய்ந்தநீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி நாட்டின்

— குங்கிலி - 1

சோதிசூழ் மணமௌலிச் சோழர் பொன்னித் திருநாட்டு

— முருக.1

நிலத்தின் ஓங்கிய நிவந்தெழும் பெரும்புனல் நீத்தம்
மலர்த்த டம்புனை வயல்புகு பொன்னிநன் னாட்டு

— உருத்திர.1

பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யா தளிக்கும் புனல்நாட்டு

— சண்டே.1

பூத்த பங்கயப் பொகுட்டின்மேற்
பொருகயல் உகளுங்
காய்த்த செந்நெலின் காடுசூழ்
காவிரி நாட்டு

— திருநீலநக்.1

வையம் புரக்குந் தனிசெங்கோல்
வளவர் பொன்னித் திருநாட்டு

— நமிநந்தி-1

வளவர் பொன்னிவளந் தருநாடு

— திருஞானசம்.2

பூவிரியும் தடஞ்சோலை புடைபரப்பப் புனல்பரக்கும்
காவிரியின் தென்கரை

— திருஞானம்.930

நீடு வண்புகழ்ச் சோழர்நீர் நாட்டிடை நிலவும்
மாடு பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பால்

— ஏயர்கோன்.1

உருநாட்டுஞ் செயல்காமன்
ஒழியவிழி பொழிசெந்தீ
வருநாட்டத் திருநுதலார்
மகிழ்ந்தருளும் பதிவயலில்
கருநாட்டக் கடைசியர்தங்
களிநாட்டுங் காவேரித்
திருநாட்டு வளங்காட்டுஞ்
செங்காட்டாங் குடியாகும்

— சிறுத்.1

சென்னி நீடனபாயன் திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழர்

— புகழ்ச்.8

மன்னி நீடிய செங்கதி ரவன்வழி மரபின்
தொன்மை யாம்முதற் சோழர்தந் திருக்குலத் துரிமைப்
பொன்னி நாடு

— அதிபத்.1

*எண்டிசை, அளவும் ஆணைச் செயத்தம்பம் நாட்டிய*
*வளவர் காவிரி நாட்டு*

— *சத்தி.1*

*மாறுகடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திருநாட்டு*

— *முனையடு.1*

*துலையிற் புறவின் நிறையளித்த சோழர்*
*உரிமைச் சோணாட்டில்*
*அலையிற் றரளம் அகிலொருசந்*
*தணிநீர்ப் பொன்னி*

— *கோச்.1*

## பட்டயங்களில் காவிரி

*'சோழராசா.......... கம்பரை, நம்ம பொன்னி நதியை நாடிப்பாட வேணுமென்றுங் கேட்க-நம்ம பொன்னி நதியாகப் பட்டது வேளாளருடைய யெச்சக்கலத் தண்ணீரென்றுஞ் சொன்னார்.'*

*'பூமி ஆகாசம் உள்ளவரைக்கும் என்று பொன்னி நதியுள்ள வரைக்கும் என்று குலோத்துங்க சோழராசா கையெழுத்து நாட்டிக் கம்பருக்குத் தந்தோமென்று கொடுத்தார்'(தானம் தரும்போது உரிமையுடன் பொன்னி நதியையும் இணைத்துச் சாட்சி எழுதுவர்)*

*–24 நாட்டுப் பட்டயம், சு. எண் 243,1272.*

*கொங்கு நாட்டுக்குரிய நதிகள் 11-இல் காவிரியும் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது.*

— *தென்கரை நாட்டுப் பட்டயம், சு. எண் 1199*

## காவேரிப் புராணத்தில் காவிரி

*பிறந்த கத்துறு பேரணிப்*
*பொருள்களைப் பெற்று*
*நிறந்த யங்கிய காவிரி*

யென்னும்நே ரிழையாள்
அறந்த ழைத்தருள் பெருகுசோ
ணாட்டிடை யடைந்து
சிறந்த கீழ்க்கடற் செல்வனைச்
சேர்ந்திடச் சென்றாள்.

பசுவுக் காய்ப்பெறும் பாலனைத்
தேர்ப்பரு தியிலிட்டு
அசுவைப் போக்கினபின் அபயனில்
ஒருவன்முன் னுரைத்த
திசுவைத் தூக்கினோக் கியசிவன்
தன்னையே காண
முசுவைப் போலவே பாய்ந்துவந்
தனள் பொன்னி முன்னியே.

செம்பியன் வள நாட்டிடைச்
சிவனையர்ச் சித்து
நம்பி யங்குறைந் தார் அவர்க்கு
உணவினை நல்கப்
பம்பியவ்விடை படர்வனென்
னாசையாற் பாரித்
தெம்பி யப்புவி யியங்கினாள்
காவிரி யென்பாள்.

வாரத் தாற் பொன்னி கவுரிமா யூரத்தில் வந்தாள்

## பெருந்தொகையில் காவிரி

தொக்க கவியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்க கரிகால வேந்தனுந்தான்.

அலைக்கும் புகழ்ப் பொன்னி யாறுகரை கண்டான்
மலைக்கும் புயத்தானும் வந்து

–சோழமண்டல சதகம்

வயக்களிற்றுமன்னன் குலப்பொன்னி வைகலும் ஆடுதிரால்

— வித்.250

## மூவருலாவில் காவிரி

கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும்-தெள்ளருவிச்

— சிவுகன்

சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்

– விக்கிரம சோழனுலா 12,13

ஆழியன் சூடிய வாரமும் ஆணையுஞ் சோணாடும்
காடு திரைத்தெறியுங் காவிரியும்-பாடுகென(273)

தலையெறியுங் காவேரி யாற்றுப் படைக்கு
மலையெறியுமன்னர்க்கு மன்னன்

— குலோத் 15

மலைகொன்று பொன்னிக்கு வழிகண்டகண்டன்,
வரராச ராசன்கை வாளென்ன வந்தே

— தக்க.549

'சைய, மலைச்சிறை தீர் வாட்கண்டன்
வெற்றணி நாள்வாழ்த்திச்
சொலைச்சிறைதீர் வேந்துக்குழாம்'

— தொல் புறத்.3 நச்.மேற்

'காவிரிப்புனல் கொணர்ந்தவனும்"

— கலிங். இராச.15

மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாள்

— ஈழத்துப் பிடாரி,

கண்கொண்ட சென்னிக் கரிகாலன்

— குலோத்-18

*குடகடற்குச் சார்பு குணகடலே யாக்கும்*
*வடகடற்குந் தென்கடற்கு மன்னன் முடுகிக்*
*கரையெறிந்த பொன்னி கடலேழுங் கோப்ப*
*வரையெறிந்த மன்னர்க்கு மன்னன்*

*— இராசராச,14,15*

*வெட்டிச் சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ*
*வழிவிட்ட வாள்காண வாரீர்*

*— இராசராச.85*

*தரைகொண்ட வேற்றரசர் தஞ்சென்னிப் பொன்னிக்*
*கரைகண்ட போர்முரசங் காணீர்*

*—இராசராச.88*

மண்ணிப் படிக்கரைப் புராணத்தில்

*— சு.எண்.106*

*பாலியும் பெண்ணை யாறும்*
*பரந்தெழு பொருநை யாறும்*
*வாலிய உள்ள வேனும்*
*வரம்பயில் பொன்னி யாறு*
*கோலிய நாடு தொன்றே*
*குளிர்புனல் நாடென் றோர்பேர்*
*ஆலிய அமையு மென்னின அதன்சிறப்*
*பெனைத் தாராயின்.* (9)

*மழைவளம் வறந்த போதும்*
*வார்தரு மருவி யா்று*
*விழைவளம் மறாது நல்கும்*
*விண்டவழ் குடுமி யோங்க*
*நுழைவள மழைய றாது*
*பொழிதலால் உயிர்க ளுய்யத்*
*தழைவளமலியும் பொன்னித்*
*தடநதி பெருகா நிற்கும்* (10)

கடல்புடை உடுத்த குவலய வரைப்பில்
காமரு சோழநல் நாட்டு
மிடல்கெழும் இருகாவிரி நதி நாப்பண்
விளங்கிய மண்ணிமா நதி... 93

## ஆற்றூர்ப் புராணத்தில் காவிரி

அனையான் (சோழன்) அலையெழு காவிரி அணிநாடுபுரந்து
பா 6

## திருவாவடுதுறைக் கோவையில் காவிரி

செம்பொற் றியாகர்க் கினிய பொன்னித்துறை (பா.42)

தடங்கா விரித்திரு நாட்டில் (பா.46)

வில்லாரஞ் சேர்கரைக் காவிரி நாட்டினில் (பா.52)

நாடுஇவள்(தலைவி)யான்(தோழி) ஒருவேலி என்றும் பொய்யா
தொழுகும்
புனற்பொன்னி நீ(தலைவன்) மன்ன

(பா.58)

பொன்னித் தெண்நீத் தரும் நம் மன்பர் வாய்ச்சொலும்
பொய்ப்ப தன்றால் (பா.72)

'பொன்முகந்து சுமந்துவரும் காவேரி போல்
வருவேன்(தலைவன் கூற்று) (பா.93)

## அம்பர்ப் புராணத்தில் காவிரி

பொன்றியுமதிற் கிளைத்த பொருதிரை கெழுபல்பொறி
மன்னிய கைகளாக வான்பெரும் பழனமெல்லாந்
துன்னிய படைகளாகக் கொண்டுசூழ் வறுமைத் தெவ்வை
மின்னிய கெடுப்பதென்று மிகுபுகழ் வளவநாடு(பா.7)

'நீருங் காவிரியே வேந்து நேரியர் மாரனே, மண்ணு
மோருஞ் சோணாடே யென்ன வுயர்மொழிப் புலவரியாருந்
தேரும்

– நாட்டுப் படலம், பா.10

## கந்த புராணத்தில் காவிரி

*தீது நீங்கிய தென்திசைக் கேகிய*
*கோதி லாத குறுமுனி தன்னொடும்*
*போதல் வேண்டும் பொருபுனற் காவிரி*

*— அகத்தியப்படலம்.பா.20*

*கொங்குநாட்டிருந்த காவிரியை இந்திரன் பூசித்தற்காக சீகாழிப்பதியின் வந்தவனத்திற்காக-காகவடிவிற் கவிழ்த்தனன். சீகாழிக்குச் செல்லத்தான் காவிரி வந்தான்*

*— காவிரி நீங்கு படலம்*

(*இந்திரன் அருச்சனைப் படலம் முழுதும் காவிரி வந்ததால் ஏறிட்ட தன்மை கூறினர்.*)

## விநாயகர் புராணத்தில் காவிரி (கச்சியப்பர்)

### அகத்தியர் பூசித்த படலம்

*எந்தை நாயகன் கயிலையிலிருந்த காவிரியாம்*
*உந்தி யாற்றினை யுதவிடக் குண்டிகை யேற்று*
*வந்து சையமால் வரையிருந்தனன் குறுமுனிவன்* 10

*சையமால் வரைத் தமிழ்முனி சார்ந்தனன் வன்செங்*
*கையினேந்திக் குண்டிகைக் காவிரி நதியை*
*வையமேத்த விங்குறும் வகை வழங்குதி யென்றான்*
*ஐயனா ரருளாவது புரிது மென்றகன்றார்.* 16

*காவிரிப் பெருநதிப் புனல் கணேசர் தம் அருளான்*
*மாவிரைத் தெழுமலர் முதல்வள மெலாமுந்தி*
*பூவிரைப் பொழில் புகுத்து வான் புரவலன் மகிழத்*
*தூவிரைப் பறாத்தொடு கடல் புகுந்தது மேனாள்.* 28

*இறை விநாயக னேவலால் எய்துமப் பொன்னி*
*முறை வழாவகை காலத்தின் முன்னுவ தெனின்* 29

## மெய்க்கீர்த்திகளில் காவிரி

*{'புவிமகள் தனிமையும் தவிர்த்துப் புனிதப் பொன்னியாடை நன்னிலப்*
*பாவையின் திருமணி மகுடம் உரிமையிற் சூடி'*

*முதலாம் குலோத். மெய்க்கீர்த்தி 1315, பக். 95*

*முதலாம் குலோத். மெய்க்கீர்த்தி 13-15, பக்.95*

*பொன்னிசூழ் நாட்டிற் புலியாணைபோ யகலக்*

*— மாறவர் சுந் .26*

*பொன்னிசூழ் செல்வப் புதுப்புனல் நாட்டைக்*
*கன்னி நாடெனக் காத்தருள் செய்யப்*
*பெருவரை யரணிற் பின்னரு காக்கிய*
*கருநட ராசனைக் களி றுதிறை கொண்டு*

*— சடைய.சுந்.42-55*

## தனிப்பாடல்களில் காவிரி

*அம்புவியில் நிகர்பரவு கலியுகச கார்த்தம்*
*ஆயிரத்தொரு னூறுக்குமேல்*
*அருள்பரவு சிசபகி தொண்டமண்டல நாடு*
*ஆத்தூரில் வருசௌளனம்*
*நம்புமறை யோர்புகழுங் காவேரி மேல்கரைகள்*
*நற்குடிகள் நாற்பத் தெண்ணாயிரம்*
*நளினமிகு சோழதிசை யெழுபத்தி யொன்பது*
*நாடர்க்கு முதல்வீடனான்*
*இன்பமது பவவருஷம் பூந்துறைச நாட்டினில்*
*இயல்வான அற்பிசைக்குள்*
*இருபத்தி யேழினில் மூலநட்சத்திரம்*
*இசைந்திரு வாமமதனில்*
*கம்பர்கள் பிடாரனை பெரியகுல வேனாடனே*
*காகம் விளக்கேற்றியிலக்*
*கருணைபுரி கொன்றையில் பிள்ளை வேனாடனே*
*கனகமுடி சூட்டினார்களே.*

*— வேனாவுடையார் பேரில் விருத்தம்,சு.எண். 1128*

*'தண்ணீரும் காவிரியே-தார்வேந்தனும் சோழனே'*
*'நீரைய்யா காவேரி நித்தமையா சங்கநாதம்*
*தேரைய்யா தைப்பூசம் தேசத்தார் கொண்டாட'*

*— சு.எண்.1251*

## பெருந்தொகையில் காவிரி

*மு. இராகவையங்கார், 1935*

*தொக்க கலியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில்*
*(தொக்க சகனிற் றொளாயிரத்துத் தொண்ணூற்றிற்)*
*மிக்க சரிகால வேந்தனுந்தான்-பக்கம்*
*அலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை கண்டான்*
*மலைக்கும் புயத்தானும் வந்து* (778)

*அஞ்சின் முடிகவித் தைம்பத்து மூன்றளவிற்*
*கஞ்சிகா வேரிக் கரைகண்டு-தஞ்சையிலே*
*எண்பத்து மூன்றளவு மீண்ட விருந்தேதான்*
*விண்புக்கான் றண்புகார் வேந்து* (779)

*செங்கான்மட வன்னம்படல் தீயாமென வெருவிச்*
*சிறையிற்பெடை மறையக் கொடு திரியத்திரள் கமுகின்*
*பைங்கான்மர கதமீது படர்ந்தேறி நறுந்தண்*
*பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா* (881)

*காவிரி நாட் டண்ணல் அனபாயன் வாழி* (887)

*காவிரி வளநாடன் கழல் சேர்ந்த மன்னர்க்கு*
*ஆரரண் இற்றல் அரிதே* (844)

*காரேற்ற தண்டலைக் காவிரி நாடன்* (901)

*ஏரியு மேற்றத்தி னானும் பிறர்நாட்டு*
*வாரிசுரக்கும் வளனெல்லாம்-தேரின்*
*அரிகாலின் கீழுகூம் அந்நெல்லே சாலும்*
*கரிகாலன் காவிரிசூழ் நாடு.* (2095)

*மரத்தினை யோரெழுத்துச் சொல்லுமற் றொன்று*
*நிரப்பிட நீரிற்பூ வொன்றாம்-நிரப்பிய*
*வேறோ ரெழுத்துய்க்க வீரரா சேந்திரனாட்*
*டாறா மெனவுரைக்க லாம்.* (2051)

*சோலையை யோரெழுத்தா லென்சொல்லும் தொக்கதன்மே*
*வீலப்பே ரெவ்வெழுத்தி னானிரம்பும்-மாலைக்*

குலவேந்தன் சென்னி குலநதியின் பேரைக்
கடைசேர்ந்த வோரெழுத்தாற் காண் (2152)

மரகதச் சோதியுடன் மாணிக்கச் சோதி
இருமருங்குஞ் சேர்ந்தரிவை பாகன்- உருவ
மலைக்கு மகில்சுமந் தாரத்து வான்கோ
டலைத்து வரும்பொன்னி யாறு 2153

## கரிகாலன் காவிரிக்கரை கட்டிய முறை

உச்சங்கோ ரெண்கோ லுயரம் பதினறுகோல்
எச்சம் பிரிவா யிருபதுகோல் - (த)ச்சளவு
மண்கொள்ளக் கொண்டகோ லெண்கோல் வளவர்கோன்
கண்கொள்ளக் கண்ட கரை (2154)

## காவிரியின் பெருக்கடங்கக் கம்பர் பாடிய வெண்பா

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனாளென்-றிந்நீர்
உரைகிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண். (2155)

வாரம் புலர்ந்த மனத்தார் மணிக்குறங்கி
னீரம் புலர்ந்தாலு மேகாரிவ் - வீரர்
அகிலோடு காவிரிநீ ராடி வருவார்
துகிலோடு சுற்றிச் சுழன்று. (2156)

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே

—(பெருந்தொகை 1554)

## பல்லவரும் காவிரியும்

திருச்சி மலையில் குடைவரைக் கோயிலின் தூணில் ஒரு சமசுகிருதச் சுலோகம் ('காடரி நயனானீ' எனத் தொடங்குவது), 'கங்கையைத் தலையில் சூடிய சிவபிரானே நீ நதிப்பிரியன். இம்மலை மீது அமர்ந்து கொண்டு கீழே ஓடும் காவிரியையும்

பார்க்கிறாயே. அவள் பல்லவமன்னனுக்குரியவளாயிற்றே' என்று கூறுமாறுள்ளது.

மகேந்திரவர்மன் காலத்திய இக்கல்வெட்டு பல்லவர் கிரந்தத்தில் உள்ளது. இது பல்லவ மன்னர்கள் காவிரிவரை பரவியிருந்தமையைக் காட்டுவதாம்.

முடிவுரை

காவிரியின் இயற்கை ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் முதன் முயற்சியாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்லணை கட்டப்பெற்றது. 1934 -இல் மேட்டூர் நீர்த்தேக்கமும் கிருஷ்ணராஜ சாகரமும் செயல்படத் தொடங்கின. 1924-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்த அடிப்படையிலேயே இவ்வணைக்கட்டுகள் எழுப்பப் பெற்றன. வரம்பு அளவுக்குக் குறைந்து வரும் தண்ணீரைக் கருநாடகம் தன்வசத்தில் வைத்துக் கொள்ளாமல் தமிழகத்திற்கு விட்டுவிட வேண்டுமென்பதே ஒப்பந்தத்தின் முக்கிய பகுதியாகும்.

இதற்குப் பிறகு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்காத நிலையில் கருநாடக அரசு கபினி நீர்த்திட்டத்தின் வடிவமைப்பை மாற்றி அமைத்தது. ஹேமாவதி கபினித் திட்டங்கள் எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் உள்ளாகாமல் வளர்ந்தன. 1971-இல் தமிழகத்தின் உழவர்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பெற்று 1972-இல் வழக்குத் திரும்பப் பெறப்பட்டது. மீண்டும் உடன்பாட்டுக்குரிய பேச்சுக்கள் தொடர்ந்தன. இதற்குப் பிறகு காவிரிக்குழு நியமிக்கப் பெற்றுக் குழுவினர் சுற்றுப்பயணம் செய்து அறிக்கை அளித்தபின்னரும் மத்திய அரசு தமிழகத்திற்குப் பயன்படும்வகையில் அளிக்கப்படவேண்டிய நீரளவை முடிவு செய்யவில்லை. 1986-ஆம் ஆண்டுவரை பயனேற்படாத நிலையில் உச்சநீதிமன்றத்தைத் தமிழ்நாடு அரசு அணுகவேண்டியதாயிற்று. கருநாடக அரசுடன் நடத்தும் பேச்சுக்களின் பயனின்மை அறிந்து இன்றைய தமிழக அரசு நடுவர் குழுவின் தீர்ப்புக்கு விடுமாறு நடுவணரசை வேண்டி நிற்கிறது.

காவிரி தமிழகத்தின் பண்பாட்டுச் சின்னம். அது தடைப்படுத்தப் படுமானால் இந்தியாவில் இன்னொரு

பாலைவனத் தேமல் படரும். பெங்களூரிலிருந்து வருகிற எக்ஸ்பிரஸ் வண்டியைத் தமிழகம் புகாமல் தடைசெய்வது எவ்வாறு சட்டவிரோதமானதோ அவ்வளவு சட்ட விரோத மானது; ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கக் கூடியது தமிழகத்திற்கு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படிக் கிடைக்க வேண்டிய தண்ணீரை தடுத்து நிறுத்துவதும் ஆகும்.

## பார்க்கத்தக்க நூல்கள்


1. Cauveri From Source to Sea K. Nagarajan
2. நடந்தாய் வாழி காவேரி - சிட்டி தி. ஜானகிராமன்
3. காவிரி வளம் - டாக்டர் சொ.சிங்காரவேலன்
4. காவிரி நதிநீர்ப்பங்கீடு - சே.பா. நமசிவாயம்
5. தமிழ்க்காவிரி - சுந்தர சண்முகனார்
6. தமிழ் இலக்கியத்தில் ஆறு - ச.வே. சுப்பிரமணியன்
7. The Mysore State Gazetteer
8. The Madras State Gazetteer
9. சங்க இலக்கியங்கள் பாட்டும் தொகையும்
10. சிலப்பதிகாரம்
11. திருஞானசம்பந்தர் தேவாரம்
12. சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்

# இலக்கிய ஆதாரங்கள்

## சங்க இலக்கியம் கி.மு. 3 முதல் கி.பி. 2 வரை

*குடமலை பிறந்த தண்பெருங்காவிரி*

*— மலைபடுகடாம்.527*

*வான் பொய்ப்பினும் தான்பொய்யா*
*மலைத்தலைய கடற்காவிரி*

*— பட்டினப்பாலை 5-6*

*மாஅ காவிரி மணம் கூட்டும்*
*தூஉ எக்கர்த் துயில்மடிந்து*

*— பட்டினப்பாலை 116-17*

*சாலிநெல்லின் சிறைகொள் வேலி*
*ஆயிரம் விளையுட் டாகக்*
*காவிரி புரக்கும் நாடுகிழ வோனே*

*— பொருநராற்றுப்படை 246-248*

*வாரல் எம்சேரி தாரல் நின்தாரே*
*அலர் ஆகின்றால் பெரும! காவிரிப்*
*பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த*
*ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை*

*— குறுந்தொகை 258 1-4*

*காவிரி மலிர்நிறை அன்னநின்*
*மார்பு நனிவிலக்கல் தொடங்கியோளே*

*— ஐங்குறு நூறு 42:3-4*

*செங்குணக்கு ஒழுகும் கலுழி மலிர்நிறைக்*
*காவிரி*

*— பதிற்றுப்பத்து 50: 5-6*

*பூவிரி அகன்துறைக் கணைவிசைக் கடுநீர்க்*
*காவிரிப் பேர்யாற்று*

*— அகநானூறு 181:11-12*

*மாரி அம்பின் மழைத்தோற் பழையன்*
*காவிரி வைப்பின் போஒர் அன்ன*

*— அகநானூறு 186 : 15-16*

வலம்படு வென்றி வாய்வாள் சோழர்
இலங்குநீர்க் காவிரி இழிபுனல் வரித்த
அறல்என நெறிந்த கூந்தல்

— அகநானூறு 213: 21-23

ஆட்டன் அத்தி நலன்நயந்து உரைஇ
தாழ்இருங் கதுப்பின் காவிரி வவ்வலின்

-அகநானூறு 222: 7-8

இழையணி யானைச் சோழர் மறவன்
கழையளந் தறியாக் காவிரிப் படப்பை

(326: 9-10)

நாடுஆர் காவிரிக் கோடுதோய் மலிர்நிறைக்
கழை அழி நீத்தம்

(341: 4-5)

புனல் நயந்து ஆடும் அத்தி அணிநயந்து
காவிரி கொண்டு ஒளித்தாங்கும் அன்னோ

(376: 10-11)

கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப் படப்பை உறந்தை அன்ன

(385:3-4)

அடுந்திறல் அத்தி ஆடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டு ஒளித்தாங்கு

(396: 13-14)

அலங்குகதிர்க் கனவி நால்வயின் தோன்றினும்
இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்

-புறநானூறு 35:6-10

மிக்குவரு மின்னீர்க் காவிரி

(43:22-23)

நீயே தண்புனற் காவிரிக் கிழவனை

(58:1)

புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி

(68:80)

பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை

-புறநானூறு (166:28-29)

...................... கரைபொருது
இரங்குபுனல் நெரிதரும் மிகுபெரும் காவிரி

(174:7-8)

காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்

(385:8-9)

கோஙட யாயினும் கோடி...............
காவிரி புரக்கும் நன்னாட்டுப் பொருநன்

(393:22-23)

காவிரிக் கிழவன் மாயா நல்லிசைக்
கிள்ளி வளவன்

(399:12-13)

காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்
புகாஅர்ச் செல்வ

பதிற்றுப்பத்து 73: 12-13

செழும்பல இருந்த கொழும்பல் தண்பணைக்
காவிரிப் படப்பை நன்னாடு அன்ன

-பதிற்றுப்பத்து 90:46-47

பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தம்

-அகநானூறு 6: 5-6

கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநள் போல

(62: 9-10)

*சிறைபறைந்து உரை இச் செங்குணக்கு ஒழுகும்*
*அந்தண் காவிரி*

*(76:11-12)*

*மழைமருள் பல்தோல் மாவண் சோழர்*
*கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை*

*(123:10-11)*

*மலைமிசைத் தொடுத்த மலிந்துசெலல் நீத்தம்*
*தலைநாள் மாமலர் தண்துறை தயங்கக்*
*கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற்று*

*- அகநானூறு 126:3-6*

*புதுவது வந்த காவிரிக்*
கோட தோய் மலிர்நிறை ஆடியோரே

*(166:14-15)*

*கழற்கால் பண்ணன் காவிரி வடவயின்*
*நிழற்கயம் தழீஇய நெடுங்கால் மாவின்*

*(177:16-17)*

## சிலப்பதிகாரத்தில் காவிரி

*(கி.பி.இரண்டாம் நூற்றாண்டு)*

*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்*
*காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு*
*மேரு வலந்திரித லான்*

*-மங்கல வாழ்த்துப் பாடல்*

*தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறை*

*— இந்திர விழவூரெடுத்த காதை 165*

*...........தாங்கா விளையுள்*
*காவிரிநாடு...................*

*- கடலாடு காதை 30*

***காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்***

*- கானல்வரி 19*

*உழவரோதை மதகோதை உடைநீரோதை தண்பதங்கொள்*
*விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி !*
*விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தவெல்லாம் வாய்காவா*
*மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி !*

*— கானல்வரி 4*

*மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை அதுபோர்த்துக்*
*கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி !*
*கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்*
*திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி !*

*வாழி அவன்றன் வளநாடு*
*மகவாய் வளர்க்கும் தாயாகி*
*ஊழி உய்க்கும் பேருதவி*
*ஒழியாய் வாழி காவேரி !*

*- கானல்வரி 26.27*

*கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்*
*விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்*
*கால்பொரு நிவப்பிற் கடுங்குரல் ஏற்றொடும்*
*சூன்முதிர் கொண்மூப் பெயல்வளம் சுரப்பக்*
*குடமலைப் பிறந்த கொழும்பஃ றாரமொடு*
*கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்கும்*
*காவிரிப் புதுநீர்*

*—நாடுகாண்காதை 102-108*

*பரப்புநீர்க் காவிரிப் பாவை*

*— நாடுகாண்காதை 148*

*பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த*
*விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்*
*திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்*

*— காடுகாண்காதை 38-40*

## மணிமேகலை

*கஞ்ச வேட்கையின் காந்தமன் வேண்ட*
*அமர முனிவன் அகத்தியன் தனாது*
*கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை*

*— பதிகம் 10-12*

தவாநீர்க் காவிரிப் பாவைதன் தந்தை

(3:55)

## பிறநூல்கள்

செங்கண் வரிவரால் மீன்பிறழுங் காவிரிநாடன்

-களவழி நாற்பது

மல்கிக் கரைகொன் றிழிதரு காவிரி நாடன்

- களவழி நாற்பது

குலைவெஞ் சிலையான் மதில்மூன் றெரித்த
கொல்லேறுடைய அண்ணல்
கலவமயிலும் குயிலும் பயிலும்
கடல்போல் காவேரி
நலம் அஞ்சுடைய நறுமாங் கனிகள
குதிர்கொண் டெதிர் உந்திப்
பலவின் கனிகள் திரைமுன் சேர்க்கும்
பழன நகராரே

- சம்பந்தர் தேவாரம்-திருப்பழனம்

## காவிரி உரிமை பற்றிய பாடல்கள்

1. அலைகொன்று வருகங்கை வாராமல் மண்மேல்
அடைக்கின்ற குன்றாடு அறுக்கின்ற பூதம்
மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராச ராசன்கை வாள் என்ன வந்தே

- தக்கயாகப் பரணி-549

2. சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழியிட்ட வாள்காண வாரீர்

- இராசராசசோழன் உலா-85

3. பொன்மலைப் புலிநின்று ஓங்கப்
புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே யாக
அயல்வழி அடைத்த சோழன்

— பெரியபுராணம்-எறிபத்தர் -2

*4................சைய*
*மலைச்சிறைதீர் வாட்கண்டன்*
*வெள்ளணிநாள் வாழ்த்திக்*
*கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்*

*- தொல் புறத்திணை 30-உரை நச்சினார்க்கினியர்*

## Documentary Evidence about Cauvery River

### 1. India Office Library Record No 796

Report of Salisbury of India Office, London 10th January 1878, submitted to His Excellency Right Honourable, the Governor General of India in Council.

### Information provided

This is a report about the famine of India in 1877 88. Madras and Mysore were affected more. It has been pointed out that some of the officers in Mysore were responsible for the intensity of the famine and the calamity fell on Madras. It has been advised to relieve the Madras people from suffering by making necessary construction work.

### 2. Report of H.E. Sullivan, Madras Civil Service submitted for femine relief by proper irrigation submitted on 11.4.1879.

### Information provided

It is pointed out to irrigate such lands year after year to the same extent as the rice fields of the Cauvery and Kodaveri deltas would be to render them sterile and water logged instead of developing their productive power unless an expensive sub soil drainage system will be adopted.

### 3. Dr.N. Sheshadri: Mysore under Rajaraja. Indian History Congress 1958. Information provided

The article explains that Mysore was under the rule of Cholas for two centuries and the Chola system of administration prevailed there.

4. **The Immerial Gazetteer of India, Vol XI. Page 9.**

**Information provided.**

There is a discription that the Ganges of Mysore overthrown by Chola's became feudatories of the Chola's.

5. **Indian Antiquary Vol. XLI 1912, page 148**

**Information provided.**

It has been described that the Old Cauvery and Killidam existed priar to 7th century A.D. and the early Chola kings prevented the flood of the Cauvery river.

6. **Journal of the Annamalai University, Vol XXIII**

K.S. Sonachalam: Benefit cost evaluation of the Cauvery Mettur irrigation project.

**Information provided**

This is a research project of the Planning Commission of India. This article mention the names of the British dignatories who felt the need of Cauvery irrigation for Madras State.

7. **India Office Library Record No 796 India the land and people**

Duke of Wellington in 1804 mentions that the revenue of Cauvery exceeds any other river in India and the system of irrigation was very ancient.